REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 டிசம்பர் 25 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 305 | Monday 25, December, 2023 | 12 பக்கங்கள் | 50/-

‘கிறிஸ்மஸ்’ எதிர்பார்ப்புக்களின் திருநாள்

## பொறுப்புகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்றுபடுவோம்



கிறிஸ்மஸ் என்பது எதிர்பார்ப்புக்களின் திருநாளாகும். "கண்ணீருடன் இருளில் சென்ற மக்களுக்கு ஒளி கிட்டியது" அந்த எதிர்பார்ப்புக்களைப் புதுப்பிப்பதற்கான கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றி அனைவருக்கும் புதிய எதிர்பார்ப்புக்களை தோற்றுவிக்கும் திருநாளாக இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகை அமைய பிரார்த்திப்போம். ஜனாதிபதி தனது கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"வறியவர்களுடன் ஒரு வேளை உண்ணுங்கள்" என்ற விடயத்தை

06




## இயேசுவின் பிறப்பு மனித நேயத்தை மதிக்கும் ஒரு சமூகத்துக்கான அடித்தளம்

பிரதமர் நத்தார் வாழ்த்துச் செய்தி



இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் நத்தார் பண்டிகை, மனித கண்ணியத்தையும் மனித நேயத்தையும் மதிக்கும் ஒரு சமூகத்துக்கான அடித்தளமாகும். அவரது போதனைகள் அன்பு, கருணை மற்றும் காருண்யம் நிறைந்த கண்களால் உலகை யதார்த்தமாகப் பார்ப்பதற்கு சிறந்த முன்மாதிரிகளை வழங்குகிறது.

இது ஒடுக்கப்பட்ட மக்களை அதிலிருந்து விடுவித்து, சிறந்ததோர் சமுதாயத்தை உருவாக்குவதற்காக தன்னை அர்ப்பணித்த இயேசு நாதரின் தத்துவத்தின் அடிப்படையில் காலத்தின் உண்மையான தேவையாகும்.

06

நாட்டில் டெங்கு நோய் பரவல் தீவிரம்

## மாகாண, மாவட்ட மட்டங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம்

திணைக்களங்கள், நிறுவனங்களின் பிரதானிகளுக்கு விசேட சுற்றுநிருபம் வெளியீடு



லோரன்ஸ் செல்வநாயகம்

டெங்கு அபாயப் பிரதேசமாக மேல்மாகாணம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், நாட்டின் மொத்த டெங்கு நோயாளர்களில் 46 வீத மானவர்கள் இந்த மாகாணத்திலிருந்தே பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர நேற்று (24) தெரிவித்தார்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களைத் திட்டமிடுமாறு நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கும் சுற்றறிக்கையை வெளியிடுவதற்கும் ஜனாதிபதியின் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 38,890 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதிலும் இருந்து

06

டெங்கு நோய் அபாயப் பிரதேசமாக மேல் மாகாணம் அடையாளம் என Dr. சுதத் சமரவீர தெரிவிப்பு. கொழும்பு, கம்பஹா, களுத்துறையில் இதுவரை 38,890 பேர் பாதிப்பு

## மகிழ்ச்சி, அமைதி நிறைந்த பெருவிழாவாக அமையட்டும்

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச



‘அமைதியின் அரசர்’ என்ற கௌரவப் பெயர் பெற்ற இயேசு கிறிஸ்துவின் அற்புதமான பிறப்பின் சிறப்புத் தினத்தை நினைவு கூரும் நத்தார் தினம், இன்றாகுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தம்முடைய குமாரனை உலகுக்கு அனுப்பியதன் மூலம், தேவனுடைய இராச்சியத்தின் மதிப்புகள் பூமியில் மீண்டும் வாழ வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்த்தார். இருண்ட இதயங்களுக்கு கிறிஸ்து நித்திய ஒளியைக் கொண்டு வந்தார். பகிர்வு என்ற அற்புதமான பாடத்தை

06

## பண்டிகைக்கால விடுமுறையில் மின்சார துண்டிப்பை தவிர்க்கவும்

நத்தார் மற்றும் புத்தாண்டு பண்டிகைக்கால விடுமுறை நாட்களில். மின்வெட்டை தவிர்க்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.



தனது உத்தியோகபூர்வ (X) டுவிட்டர் பக்கத்திலேயே அவர் இவ்வாறு பதிவொன்றை செய்துள்ளார். அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அவசர பராமரிப்புப் பணிகளுக்காக மின்சாரம் துண்டிக்கப்படுவதைத் தவிர்க்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பராமரிப்பு பணிகளுக்காக மின் இணைப்பை துண்டிப்பது தொடர்பாக சர்வதேச வழிகாட்டுதலின்படி செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடர்ச்சியாக மின்சாரம் துண்டிக்கப்படுவதாக மக்களிமிருந்து கிடைத்த முறைப்பாடுகள்


06



மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நடைபெற்ற ‘மலையகம் 200’ மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட தமிழ்நாடு அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் என். முருகுமாறன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் ம. ம. மு சிரேஷ்ட உப தலைவர் சிவலிங்கம் சதீஷ்குமார் நிற்பதையும் காணலாம்.

## நீண்ட இடைவெளிக்குப் பின் முதலாவது கொவிட் மரணம்

கண்டி வைத்தியசாலையில் பதிவு



கண்டி போதனா வைத்தியசாலையில் கடந்த (23) உயிரிழந்த 65 வயது நபர் கொவிட்19 வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஈரல் அழற்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர், மரணமானதாக கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர்

06



03 ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலய மாணவர்களுக்கு ரஷ்யாவில் புலமைப் பரிசில்

## 56 இலங்கையரை பாதுகாப்பாக மீட்க மியன்மாரிடம் கோரிக்கை

மியான்மாரில் கடத்தப்பட்ட இலங்கையர்களை பாதுகாப்பாக திருப்பி அனுப்புவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு இலங்கை அரசாங்கம் மியான்மார் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் வெளிவிவகார அமைச்சு, கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் மியன்மாரில் சைபர் குற்றங்களில் ஈடுபடுத்துவதற்கென ஆட்கடத்தல் கும்பலால் இலங்கையர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் பதிவாகி வருவதாகத் தெரிவித்துள்ளது.

அதேவேளை, முன்னதாக மியன்மார் அரச அதிகாரிகளுடன் அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் இணைந்து முன்னெடுத்த மீட்பு நடவடிக்கைகளை அடுத்து, 2022-2023 க்கு இடைப்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட 32 இலங்கையர்கள் மீட்கப்பட்டனர்.

அதேபோன்று வெளிவிவகார அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி,

06

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

## ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தில் விசேட மகஜர் கையளிக்க ஏற்பாடு

சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு மகஜரொன்றை கையளிப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது, கடந்த 28 வருடங்களாக சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் மகஜர் கையளிக்கப்படவுள்ளது. இம்மகஜரை தயாரிக்கும் முகமாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இடையேயான சந்திப்பை குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற இச்சந்திப்பில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், 28 வருடங்களுக்கு மேலாக

06

## குளிரூட்டி டிப்பர் வாகனம் பாலத்துள் விழுந்து விபத்து

மட்டு நோக்கி பயணிக்கையில் சம்பவம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



பொலன்னறுவையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த ரிப்பர் ரக குளிரூட்டி லொறியொன்று (24) விபத்திற்குள்ளாகியுள்ளது.

06

## அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து விசேட அதிரடிப் படையினர் நீக்கம்

மாற்று வழி தொடர்பிலும் ஆராய்வு

அதிவேக நெடுஞ்சாலைகளில் கடமையிலீடு பட்டுள்ள விசேட அதிரடிப் படையினரின் பணிகள் மற்றும் அவர்களை அந்தப் பணிகளிலிருந்து நீக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில். ஜனாதிபதி செயலகத்தில் நடந்த (22) கூட்டத்தில் இதுகுறித்து ஆராயப்பட்டது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கும்,

06

## 1,955 கிலோ சட்டவிரோத பீடி இலைகள் நுரைச்சோலையில் மீட்பு




சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 1,955 கிலோ பீடி இலைகள், நுரைச்சோலையில் கைப்பற்றப்பட்டது. கடற்படையினர் இவற்றை கைப்பற்றினர்.

நுரைச்சோலையில் கடந்த (23) அதிகாலை தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், பீடி இலைகளை ஏற்றிச் செல்லும் லொறி குறித்து கேள்வியுற்றனர். இதையடுத்து, நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்துக்கருகில்

06

## 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு ஒரு வாரத்தில் 13,666 பேர் கைது



தேடப்படும் 4,665 பேரில் 1,107 கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் போதைப்பொருள் வர்த்தகர்களை கைதுசெய்தல் மற்றும் பாதாள உலக குழு உறுப்பினர்களை கைதுசெய்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை இனங்காணும் 'யுக்தி' சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலம் கடந்த 17 ஆம் திகதி முதல் நேற்றுவரையான காலப்பகுதியில் 13,666 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம்

06

## ஐ.தே.க, புதிய தலைமைத்துவ சபை ஜனவரி முதல் நடைமுறையில்

ருவன், ரவி, அகில, சாகல சபையில் உள்ளடக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் முதல் புதிய தலைமைத்துவ சபையூடான நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியில் தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இச்சபை மூலமே முன்னெடுக்கப்படவுள்ளது.

06

# நத்தார் சிறப்பிதழ்





# கிறிஸ்மஸ்
## பகிர்தலின் பெருவிழா

உலகெங்குமுள்ள மக்கள் இறைமகன் இயேசு பிறந்த கிறிஸ்மஸ் பெருவிழாவை கொண்டாடி மகிழ்கின்றனர்.

கிறிஸ்து பிறப்பு விழா மகிழ்வினை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்கின்ற விழாவாகும். கிறிஸ்து பிறப்பு வெறுமனே ஒரு நிகழ்வு கிடையாது. நிகழ்வானால் அது அப்படியே கடந்து போய்விடும். ஆனால் கிறிஸ்து பிறப்பானது வாழ்வின் அனுபவமாகும். அதுவொரு பகிர்வின் அனுபவமாகும்.

பெத்லேகம் தொழுவமதில் பிறந்த பாலகன் தன்னையே மானிடருடன் பகிர்ந்து கொண்டார். யோவான் நற்செய்தியாளர் கூறுமாற்போல் "தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" *(யோவா. 3:16)* என்கிற அனுபவமாகும்.

கடவுள் தன் ஒரே மகனையே உலகினராகிய மானிடர்மீது கொண்ட அன்பின் நிமித்தம் பகிர்ந்து கொண்டார். அண்மையில் சகோதர சமயத்தவர் ஒருவர் பகிர்ந்து கொண்ட வார்த்தையானது நோக்கத்தக்கதாக அமைந்திருந்தது.

அவரின் வார்த்தைகளில் "எல்லா சமய நம்பிக்கையாளர்களும் கடவுளைத்தேடி செல்கின்றார்கள். ஆனால் கிறிஸ்தவ நெறியில் கடவுள் மானிடரைத்தேடி வருகிறார்" என்றுரைத்தார். இதனையே இன்னுமொரு பாடலின் வரிகள்பின்வருமாறு பறைசாற்றுகிறது. "மண்ணுலகில் இன்று தேவன் இறங்கி வருகிறார். நல்ல மனிதர் நடுவில் குழந்தை வடிவம் பெறுகிறார்." இவ்வரிகள் இறைவன் மானிடரைத் தேடி வந்தார் என்பதனை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றது.

இவற்றை வைத்து நோக்குகின்றபோது கிறிஸ்மஸ் பெருவிழா பகிர்வின் விழாவாகும். "பகிர்வதனால் மகிழ்ச்சி அடைகிறோம்" என்பது அன்னை தெரசாவின் பொன்மொழியாகும்.

ஒரு பெண் தன் வாழ்வினில் எல்லாம் இருந்தும் மகிழ்வினை இழந்தவளாக வாழ்வினை தொலைத்து அலைந்தாள்.

தான் இழந்த மகிழ்வினை மீளவும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரு ஆற்றுபடுத்துனரை அணுகி தனது நிலையை எடுத்துரைக்கின்றாள். அவரும் அவள் கூறியதைக் கேட்டுவிட்டு மகிழ்வாக இருக்க வேண்டுமென்றால் அவரது ஆற்றுப்படுத்தல் நிலையத்தில் துப்பரவுப் பணியில் ஈடுபடுகின்ற மரியா என்கிற பெண்மணியைச் சந்திக்கச் சொல்கின்றார்.

அப்பெண் மணியும் தனக்கு கூறப்பட்டவாறே மரியாவை சந்தித்தாள். மரியாவும் தனது வாழ்வின் கதையினை அவளோடு பகிர்ந்து கொள்கிறாள். அதாவது திருமணம் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சியான தருணமதில் தனது கணவர் புற்றுநோய் காரணமாக இறந்துபோனார். அவரைத் தொடர்ந்து சிறிது காலத்தில் தனது ஒரே மகனும் விபத்தில் சிக்கி இறந்து போனதாகக் கூறினார். அவர்கள் இருவரதும் இறப்பின் பிற்பாடு எனக்கு வாழவே பிடிக்கவில்லை தற்கொலை செய்து கொள்ளவும் முயற்சித்தேன். ஒருதடவை நான் வேலை செய்கின்ற இடத்திலிருந்து பணிமுடித்து நடைபிணமாக வீடு திரும்புகின்றபோது ஒரு பூனைக்குட்டி என்னைப் பின்தொடர்ந்து வந்தது. அதனை துரத்திவிட முயன்றும் முடியாமற் போனது. வீட்டிற்குள் சென்றபோதும் அது என்னையே தொடர்ந்து வந்தது.வீட்டிற்குள் வந்த பூனைக்குட்டிக்கு ஒரு தட்டில் பால் வைத்தேன். அதனை குடித்துவிட்டு அப்பூனைக்குட்டி என் கால்களை செல்லமாக வருடியது. அதன் தொடுகை எனக்குள் நீண்ட நாட்களுக்கு பிற்பாடு மகிழ்ச்சியினைத் தந்தது.

நான் முதற்தடவை சிரித்தேன். பிற்பாடு அப்பூனைக்குட்டி உறங்குவதற்கு ஓர் இடத்தை தயார் செய்து வைத்தேன். அதிலே அப்பூனைக்குட்டியும் ஒய்யாரமாக உறங்கியது. அது எனது மகிழ்ச்சியினை இன்னும் கூட்டியது. வாய்பேசா இப்பிராணியே நம்மை மகிழ்ச்சிப் படுத்த முடியுமாயின் மனிதர்களை மகிழ்ச்சிப் படுத்தினால் நாம் எவ்வளவு மகிழ்வாய் இருக்க முடியுமென எண்ணினேன். அடுத்தநாட் காலையில் தன் வீட்டிற்கு அடுத்து படுத்த படுக்கையாய் இருக்கின்ற ஒரு வயதான பெண்மணிக்கு றொட்டிகளைச் செய்து கொண்டு போய் அவருக்கு உண்ணக்கொடுத்து பறிமாறினேன். அப்பெண்மணி அவ் உபசரிப்பினைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தார். அவரது மகிழ்ச்சி என்னையும் மகிழ்ச்சிப்படுத்தியது. நான் இழந்த மகிழ்வினை சிறிது சிறிதாக மீளவும் பெற்றுக்கொள்ளத் தொடங்கினேன்.

தொடர்ந்து மரியா தன்னைச் சந்தித்த பெண்மணியைப் பார்த்து "வாழ்வில் மகிழ்ச்சியினை அனுபவிக்க வேண்டுமானால் அடுத்தவரை மகிழ்ச்சிப் படுத்திப்பார் அவர்கள் அடையும் மகிழ்ச்சி உன்னை மகிழ்விக்கும்" என்றார்.

அப்பெண்மணியும் அவர் சொன்னதைக் கேட்டு செயற்படுத்தி தான் இழந்த மகிழ்ச்சியினை மீளவும் பெற்றுக்கொண்டார்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்பதுஅமுதவாக்கு. ஒன்றுமில்லாதவரை இக் கிறிஸ்து பிறப்புக் காலத்தில் உங்களது பகிர்வினால் நீங்கள் மகிழ்ச்சி படுத்திப் பாருங்கள்.நீங்கள் அடைகின்ற மகிழ்ச்சிக்கு அளவேயிருக்காது.

பகிர்வினை மூன்று நிலைகளில் நாம் செயற்படுத்தி அனுபவிக்க முடியும். முதல் வகைப் பகிர்வு நம்மிடம் உள்ளவற்றில் ஒரு பகுதியினை அடுத்தவருக்கு கொடுப்பது. உதாரணத்திற்கு ஐநூறு ரூபா பணமுள்ள ஒருவர் தன்னிடம் உதவி கேட்டு வருபவருக்கு அதிலே பாதியையோ அல்லது ஒரு பகுதியினையோ வழங்குவது. அதாவது தம்மிடம் உள்ளவற்றில் தமக்கும் வைத்துக்கொண்டு அடுத்தவருக்கும் கொடுப்பது. விவிலியத்தில் சக்கேயு தனது மனமாற்றத்தின்போது தனது சொத்தில் பாதியினை ஏழைகளுக்கு கொடுத்தான் *( லூக். 19:8)* என்று எடுத்தியம்பபடுகிறது.

இரண்டாவது வகையான பகிர்வு தன்னிடம் உள்ளது முழுவதையும் அப்படியே வழங்கிவிடுவது. அதாவது தன்தேவையினை தியாகம் செய்து அடுத்தவர் தேவையினை பூர்த்தி செய்வது. விவிலியத்தில் ஏழைக் கைம்பெண் ஆலயத்தில் காணிக்கை செலுத்திய பகுதியில் இதனை நோக்க முடியும் *(லூக். 21:14)*. இங்கே தன் பிழைப்புக்கான அனைத்தையும் காணிக்கையாகப் போட்டாள் என்று இயேசு எடுத்தியம்புகின்றார்.

தனக்குத்தேவையிருந்தும் தன்னைத் தியாகம் செய்து அடுத்தவருக்கு வழங்குவதே உள்ளதை அவ்வாறே வழங்கும் பகிர்வாகும்.

மூன்றாவது வகை பகிர்வானது தன்னையே முழுமையாக வழங்குவதாகும். இன்று நாம் உலகில் இறந்த பிற்பாடு உடல் உறுப்புக்கள் தானம் செய்வோரைக் குறித்து கேள்விப்படுகின்றோமே அதுவே இந்நிலையாகும்.

கண், சிறுநீரகம், கல்லீரல் மற்றும் உடல் தானம் போன்ற செயற்பாடுகளால் இந்நிலை உணர்த்தப்படுகிறது.

சிலுவையில் இயேசு கிறிஸ்து தம்மையே முழுவதுமாக மானிட வாழ்வுக்காக கையளித்தார். தற்கையளிப்பு இதனால் அர்த்தம் பெறுகிறது. இக் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவில் நம்மையே நாம் பிறருக்கு பகிர்ந்திடஅழைக்கப்படுகின்றோம்.

ஹவார்ட் தூர்மன் என்பவர் கிறிஸ்மஸ் பெருவிழாவின் மனநிலை என்கிற தமது பதிவில் பின்வருமாறு குறிப்பிடுவார். "வானதூதர்களின் பாடல் நின்றபோது வானத்தின் நட்சத்திரம் விலகியபோது ஞானிகளும் (அரசர்களும் அரசிளங்குமாரர்களும்) அரண்மனை திரும்பியபோது, இடையர்கள் தங்களது கிடைக்கு திரும்பியபோது, கிறிஸ்து பிறப்பின் பணியாகிய தொலைந்தவற்றைத் தேடும் காயப்பட்டவற்றைக் குணப்படுத்தும் பசித்திருப்போருக்கு உணவளிக்கும் கைதிகளை விடுவிக்கும், நாடுகளை மீளவும் கட்டியெழுப்பும், மக்களிடையே அமைதியைக் கொணரும் இதயங்களில் இசைபாடும் பணி ஆரம்பமாகிறது." எவ்வளவு அர்த்தம் பொதிந்த வார்த்தைகள்இவை.

கிறிஸ்து பிறப்பு பெருவிழாவின் மகிழ்வு நம்மிலே தங்கவேண்டுமாயின்

கிறிஸ்து பிறப்பின் பணி நம்மிலே தொடரவேண்டும். கிறிஸ்து பிறப்பின் பணியானது ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், அனாதைகள், கைம்பெண்கள்,நலிவுற்றோர், பயங்கரவாத தடைச்சட்டத்தால் கைது செய்யப்பட்டு இன்று வரையில் விடுதலையின்றி வாடுவோர், பசியால் வாடுவோர் குளிரால் நடுங்குவோர் இல்லிடங்களை இழந்தோர், காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டு பெருவெள்ளத்தால் அவதியுறுவோர், காசாவில் நாளாந்தம் அரங்கேறும் மனித அவலத்தால் தங்களது உறவுகளை இழந்து தவிக்கும் இவர்களில் அதிகமாகத் தேவைப்படுகிறது.

இவர்களுடன் நமது பகிர்வுகள் அதிகரிக்கின்றபோது கிறிஸ்மஸ் பெருவிழா அர்த்தம் கொள்கிறது.

கிறிஸ்து பிறப்பு நத்தார் கொண்டாட்டம் நமக்கான கொண்டாட்டம் மட்டுமல்ல. மாறாக அது அனைவருக்குமான கொண்டாட்டமாகும். இதனை கொண்டாட முடியாதவர்களும் இதனைக் கொண்டாட வேண்டுமாயி கிறிஸ்துவின் நத்தாரின் பகிர்வு நமது அன்றாடப் பகிர்வில் வெளிப்பட வேண்டும். மத்தேயு நற்செய்தி 25:40 "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்வதையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" எனும் வார்த்தைகள் அர்த்தம் கொள்ளும் காலம் நத்தார் காலமாகும்;. "வறுமையினால் வாடுவோரில் இயேசுவைக் கண்டாயா? வருத்தத்தினால் வருந்துவோரில் இயேசுவைக் கண்டாயா? அல்லல் படுவோரில் ஆபத்தில் இருப்போரில் இயேசு பிறந்திருக்கும் அழகை நீ கண்டாயா?" என்கிற பழைய பாடலின் வரிகள் கிறிஸ்மஸ் பெருவிழாவின் தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்புகிறது.

எனவே கிறிஸ்மஸ் பகிர்வின் விழா.

எங்கெல்லாம் பகிர்வு உண்டோ அங்கெல்லாம் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா உண்டு. உள்ளவர்கள் உள்ளவர்களுடன் உங்களது கிறிஸ்மஸ் அன்பளிப்புக்களை பகிரும் அதே வேளையில் இல்லாதவர்களுடனும் பகிர்ந்து அவர்களையும் மகிழ்வித்து நீங்களும் மகிழ்ந்தால் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா கொண்டாட்டமே.

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் பெருவிழா வாழ்த்துக்களும் பாலகனாய் வந்துதித்த குழந்தை இயேசுவின் ஆசீரும் நிறைவாய் கிடைப்பதாக.

அருட்பணி
**அ.அ. நவரெத்தினம்** (நவாஜி)
(சிரேஸ்ட விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்)

## கிறிஸ்மஸ் தாத்தா

குட்டையான, குண்டான உருவம், வெண்மையான தாடி, சிவப்பு வெல்வெட் உடை, சர்க்கஸ் கோமாளி அணிவது போன்ற ஒரு குல்லா, முதுகில் தொங்குகின்ற ஒரு நீண்ட பையில் பரிசுகள் சுமக்க காட்சி தருபவர்தான் கிறிஸ்துமஸ் தாத்தா.

கிறிஸ்மஸ் தாத்தாவின் வாகனம் இனிதே விரைந்திட ரெய்ண்டீர் எனப்படும் நீண்ட கிளைகளையுடைய கொம்புகள் கொண்ட மான்கள் இருப்பது போல் காட்டப்படும், அதை எடுத்துக் கொண்டு கிறிஸ்துமஸ் தாத்தா கிளம்பி விடுவார்.

மேற்கத்திய நாடுகளிலும் சில கீழைத் தேய நாடுகளிலும் மட்டுமே காணப்பட்ட கிறிஸ்துமஸ் தாத்தா இன்றைக்கு உலகெங்கும் பரவி அவருக்கே உரித்தான சிவப்பு உடையில் வெண்தாடி, கண்ணாடி சகிதமாக வலம் வரத் தொடங்கி விட்டார்!

சாண்ட்டா என்றும் சாண்ட்ட குளோஸ் என்றும் அன்போடு குழந்தைகள் குதூகலித்துக் கொள்வதை நாமறிவோம்! உலகில் எந்தக் கிறிஸ்தவக் குழந்தையிடமும் சாண்ட்ட கிளாஸ் என்றால் அறியாத குழந்தைகளே இல்லை எனலாம்.

கிறிஸ்மஸ் தாத்தா இல்லாமல் இன்று கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுவதில்லை என்ற அளவுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவும், கிறிஸ்மசும் ஐக்கியப் பட்டுப் போனது. கிறிஸ்மஸ் தாத்தா தோன்றிய விதம் குறித்து அலசினால் அவருக்கும் ஒரு பின்னணி உண்டு என்பதை அறியலாம்! உண்மையில் புனித நிக்கோலஸ் தான் சாண்ட்டகிளாஸ் என்ற கிறிஸ்மஸ் தாத்தா உருவாகக் காரணம்.



# "வார்த்தை மனுவுருவானார்"



கிறிஸ்து பிறப்பின் திருவிழாவானது நம் கடவுளின் அளவில்லா கருணையை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது .

"குழந்தையைத் துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள். கடவுள் தமது சாயலிலும் பாவனையிலும் மனிதனைப் படைத்தார்" (தொட.நூல் 1:27)என்று பார்க்கிறோம்.

ஆனால் கடவுள் உலகினர் மேல் கொண்ட அளவிட முடியாத அன்பை வெளிப்படுத்த விரும்பி தம் மகனை மனித சாயலில் பிறக்க திருவுளம் கொண்டார்.

இதையே "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்"

(யோவான்1: 14)

கடவுள் மனிதன் மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்தும் பெருவிழாதான் கிறிஸ்து பிறப்பு நத்தார் பெருவிழா.

கடவுள் மனிதனை மட்டும் கிறிஸ்து இயேசுவில் தன்னோடு இணைத்துக் கொள்ளவில்லை. உலக சடப் பொருட்களையும் தன்னோடு இணைத்துக் கொள்ள வேண்டி அப்பத்தை தன் உடலாகவும் இரசத்தை தன் இரத்தமாகவும் மாற்றுகின்றார்.

நாம் கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் உண்டு பருகும் போது பாவத்தினால் இழந்த பரிசுத்தம் நிறைந்த மனித சாயலை மீண்டும் நாம் கிறிஸ்து வழியாக பெற்றுக் கொள்கின்றோம்.

உலக படைப்புகளும் கிறிஸ்துவில் புனிதமடைகிறது.

இன்றைய தினத்தில் நாம் கேட்கும் நற்செய்தியிலிருந்து இயேசு கிறிஸ்து யூதேயா நாட்டில் உள்ள பெத்லகேமில் பிறந்தார் என்பது புலனாகிறது.

'பெத்தலகேம்' என்பதற்கு'உரொட்டியின் இருப்பிடம்' என்பது பொருள்.

இயேசு பிறந்த ஊரானது உணவாகக் கருதப்படும் உரொட்டித்துண்டு தயாரிக்கப்படும் இடம்.

இயேசுவின் பிறப்பானது"குழந்தையை துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள்"(லூக்கா 2:12) என்று வானதூதர் அறிவிக்கின்றார்.

தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்ட இயேசு நமக்கு உணவாகப் போகிறார் என்பதை எடுத்துக் காட்டும் வண்ணமாக அமைந்துள்ளது.

உணவு என்பது மக்களுடைய வாழ்க்கைக்கு ஆதாரமானது. தமிழரின் தமிழ் மக்களின் விருந்தோம்பல் உணர்வு அதற்கு ஒரு உதாரணமாகும்.

'செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல் விருந்து வானத்தவருக்கு' என்று நிரூபிக்க வள்ளுவர் உணவுப் பழக்கத்தை அழகாக கூறியுள்ளார்.

மேலை நாடுகளில் உணவுப் பழக்கமானது அவர்களின் உறவை வளர்ப்பதாக உள்ளது. அவர்களது அன்பின் அடையாளமாகவும் அது கருதப்படுகிறது.

இந்த அழிந்து போகும் உணவுக்கு இவ்வளவு சக்தி என்றால் கடவுள் தன்னையே உணவாகத் தருவது அவரது அன்பின் வெளிப்பாடு." அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். அழியாத உணவுக்காக உழையுங்கள் அவ்வுணவை மானிட மகன் உங்களுக்கு கொடுப்பார்" என்கிறார் இயேசு (யோவான் 6:27).

ஏசாயா இறைவாக்கினர் அன்பின் வெளிப்பாடு எப்படிப்பட்டது என்பதை மனநிலைக்கு ஏற்ப எடுத்துரைக்கின்றார்.

கடவுள் இஸ்ரேல் மக்கள் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பானது விடுதலையையும் மகிழ்ச்சியையும் அக்களிப்பையும் தருவதாகக் கூறுகின்றார். இத்தகைய அன்பானது அறுவடை நாளில் மக்கள் மகிழ்ச்சியுறுவது போலவும் கொள்ளைப் பொருட்களை பங்கிடுவோர் அடைகின்ற மகிழ்ச்சியைப் போலவும் உள்ளது.'மனிதர் அனைவருக்கும் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது' என புனித பவுல் கூறுகின்றார்.

இந்த அன்பின் வெளிப்பாடானது எல்லோரையும் சொந்த மக்களாகவும் இம்மையில் நாம் பெரும் மகிழ்ச்சியை பெரும் பொருட்டு தன்னையே எமக்காக ஒப்படைத்தார்.

எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியையூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அளிக்கின்றேன் என்ற மகிழ்ச்சியின் செய்தியை இன்றைய நற்செய்தியில் நாம் பார்க்க முடியும்.

நம் கடவுளின் பரிவுளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது (லூக்கா1: 78,79)

என்று செக்கரியா இறைவாக்கு உரைக்கின்றார்.

'இந்த மீட்பு பிரவினத்தாருக்கும் வெளிப்பாடு அருளும் ஒளி' என்று சிமியோன் இறைவாக்கு உரைக்கின்றார்.

மக்கள் அனைவரது மீட்புக்காகவும் இயேசு கொண்டு வந்த அன்பின் வெளிப்பாடு அவருடைய பிறப்பு இதை அறியும் விதமாக வானதூதர் இடையர்களுக்குத் தோன்றி நற்செய்தி அறிவித்தார் என்பதை லூக்கா 2:8ஆம் வசனத்தில் பார்க்கின்றோம்.

அக்காலத்தில் இழிவாக கருதப்பட்ட புறந் தள்ளப்பட்ட இடையர்களுக்கு இறைவனின் அன்பு வெளிப்படுகின்றது.

நம் இறைவனின் அருள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருப்பலியின் போதும் 'பிறப்பு' வெளிப்படுகிறது.

அவர் நமக்கு உணவாகப் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே என்கின்றார் இயேசு. (யோவான் 6:35)

நாம் இறையன்பின் வெளிப்பாட்டைப் புரிந்து கொள்வோம்.

இந்தோனேசியாவில் பூகம்பம் இடர்பாடுகளின் நடுவே ஒரு குழந்தை உயிரோடு மீட்கப்பட்டது. அந்த குழந்தையின் அருகில் ஒரு கையடக்கத் தொலைபேசி கிடந்திருக்கின்றது.அதில் ஒரு செய்தி''கண்ணே நீ உயிரோடு இருந்தால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்

உன் அம்மாவிற்கு உன்னை றொம்பப் பிடிக்கும்" என்ற செய்தி இருந்தது.

நம் கடவுளுக்கு நம்மை றொம்பப் பிடிக்கும் அதனால்தான் அவர் நமக்காக இன்று இந்த மண்ணுலகில் பிறந்திருக்கின்றார் அவரை சந்திப்பதற்கு விரைவோம்.



அம்புறோஸ் பீற்றர்
(மறையாசிரியர் – பிரான்ஸ்)

## ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலய மாணவர்களுக்கு ரஷ்யாவில் புலமைப் பரிசில்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலய மாணவர்கள் ஐவருக்கு ரஷ்யாவில் சர்வதேச பாடசாலையொன்றில் புலமைப் பரிசில்கள் கிடைத்துள்ளன.

அவ்வித்தியாலயத்தின் 05 மாணவர்களும் அவரது ஆசிரியர்கள் இருவரும் மற்றும் பிள்ளைகளின் பெற்றோரை பிரதிநிதித் துவப்படுத்தி அவர்களின் பொறுப்பாளர்களும் நேற்று முன்தினம் ரஷ்ய மஸ்கட் நகருக்கு பயணமாகியுள்ளனர்.

மூன்று மாத காலங்களுக்கு இந்த புலமைப் பரிசில் கிடைத்துள்ளது. இதன் மூலம் ரஷ்ய மொழி, கலாசாரம் மற்றும் சர்வதேச ஆய்வுகள் உள்ளிட்ட பல பிரிவுகள் உள்ளடங்கும் செயன்முறைளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு, இம்மாணவர்களுக்கு கிடைத்துள்ளது.

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தின் ஸ்தாபகரான அமைச்சர் பந்துல குணவர்தன ரஷ்யாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அவரது விசேட வேண்டுகோளுக்கு இணங்க இலங்கையில் உள்ள ரஷ்யத் தூதுவர் லெவன் ஜஹர்யான் மற்றும் ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜனிதா லியனகே ஆகியோருடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தை மூலம் இந்த சிறந்த வாய்ப்பு அம்மாணவர்களுக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நத்தார் பண்டிகை,போயா தினம் மதுபானசாலைகளை மூடுவதற்கு உத்தரவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நத்தார் பண்டிகை இன்று மற்றும் நாளைய போயா தினத்தையொட்டி நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கலால் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதுவேளை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியை பெற்றுக் கொண்டுள்ள மதுபான விற்பனைக்காக கலால் திணைக்கள அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ள ஹோட்டல்களுக்கு இன்றைய தினத்தில் இந்த உத்தரவு செல்லுபடியற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே வேளை நாளைய தினம் போயா விடுமுறை தினத்தில் இவ்வாறான ஹோட்டல்கள் உட்பட அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காட்டு யானையுடன் பஸ் மோதி விபத்து

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

இபலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹாஇலுப்பள்ளம பகுதியில் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று காட்டு யானை ஒன்றுடன் மோதி வீதியை விட்டு விலகிச் சென்று மரத்துடன்

06

## உலகில் அந்தகார இருள் நீங்கி நித்திய ஒளி நீடித்து நிலவட்டும்

### அமைச்சர் டக்ளஸ் நத்தார் வாழ்த்து



சகல இடங்களிலும் அந்தகார இருள் நீங்கிய நித்திய ஒளியும் நீடித்த சமாதானமும் நிலவட்டுமென, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானாந்தா, நத்தார் தின வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.மேலும் அந்த வாழ்த்து செய்தியில்,..

அன்பின் வடிவாக, உலகத்தின் ஒளியாக கருணை மைந்தன் இயேசு பிரான் அவதரித்தார். இந்த ஆழ்மன விருப்பில் எமது மக்கள் கொண்டாடி மகிழும் நம்பிக்கைத்திருநாளே நத்தார் பெருநாள்.

எமது வயல் வெளிகள், கடல் வளங்கள், மேச்சல் நிலங்கள், எமது மக்களின் ஆன்மீக வணக்கத்தலங்கள் எல்லாமே எமது முன்னோர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த வரலாற்று வாழ்விடங்ளுக்குச் சொந்தமானவை,..

இது, எமக்கென்று வாக்களிக்கப்பட்ட சொந்த பூமி. இதன் விடியலுக்காகவே நாமும் இங்கு வரவழைக்கப்பட்டவர்கள். எமது மக்களின் அவலங்கள் கண்டு, அழுகுரல் கேட்டு, இரத்தப்பலிகளின் இடர்கள் கண்டு நிரந்தர விடியலை நோக்கிய எமது இலட்சியப் பயணத்தின் வழிமுறை

06

## அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ இறைவன் அருள வேண்டும்

### மன்னார் மறைமாவட்ட ஆயர் வாழ்த்து

**(மன்னார் குறுப் நிருபர்)**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எம்மிடமிருந்து விலகி நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியோடும், திருப்தியோடும் வாழ இறைவன் எங்களுக்கு அருள வேண்டும் என கிறிஸ்து பிறப்பு வாழ்த்துச் செய்தியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.


அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்,

கிறிஸ்து பிறப்பு விழா என்பது இறை மகன் இயேசு, இவ்வுலகில் மனிதனாக கன்னிமரியாவுக்கு பிறந்த நாளை கொண்டாடும் ஒரு தினமாக உள்ளது.

கிறிஸ்து இவ்வுலகில் பிறந்து இறைவனால்

06

## இயேசுவின் உயரிய குணங்களை பின்பற்றி சகோதரமாய் வாழ்வோம்



"இயேசு போதித்த அன்பு, எளிமை, கருணை போன்ற உயரிய குணங்களை மக்கள் அனைவரும் பின்பற்றி, சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும். எமது நாட்டில் நிலையான நல்லிணக்கம் சமத்துவம் மலர அனைவரும் ஒன்றுபட வேண்டும்." இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான்,விடுத்துள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

"ஏழைகளையும், எளிய மனத்தோரையும், கைவிடப்பட்டோரையும் ''இறைவனின் பிள்ளைகள் நீங்கள்'' என்று வாஞ்சையோடு அரவணைத்து மானிட இனம் நல்வழியில் வாழ, புதிய ஏற்பாடுகளை போதித்த இயேசு பெருமான், தன் போதனைகளாலும், வாழ்ந்து காட்டிய நெறிகளாலும், வணக்கத்திற்குரியவராகத் திகழ்கிறார்.

எனது பார்வையில் இயேசு ஒரு சமூக புரட்சியாளர். மக்கள் மத்தியில் விடுதலையை விதைத்தவர். இயேசு கிறிஸ்து, தன் பிறப்பின் ஊடாக கொண்டுவந்த விடுதலையை, மீட்பை அனைவரும் உணர்ந்து அனுபவிக்க வேண்டும்.

06

## எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேற இந்நாள் ஒரு பொன்னாளாக அமையட்டும்

### கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்



அன்பு, மனிதாபிமானம், சகோதரத்துவம், மத நல்லிணக்கம் என மனித வாழ்க்கைக்குத் தேவையான பல நல்ல ஒழுக்கங்களைக் கற்றுத் தந்த இயேசுபிரானின் பிறந்த நாளை கிறிஸ்மஸ் தினமாகக் கொண்டாடி மகிழும் கிறிஸ்துவ சமூகத்தினருக்கும் கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.கா. தலைவருமான செந்தில் தொண்டமான் கிறிஸ்மஸ் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாவ, வாழ்விலிருந்து மனிதனை மீட்கவே இறைமகன் இயேசு பாலகன் மனித உருவெடுத்தார்.

அன்புக்கு இருக்கும் மகத்தான சக்தியை உணர்த்தவே இவ்வுலகில் இயேசுபிரான் அவதரித்தார்.

இந்நந்நாளில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கருணைகாட்டி இனநல்லுறவுடன் கூடிய சுபிட்சமான நல்வாழ்வை எதிர்கொள்ள வேண்டும்.

உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களும் சகோதரத்துவத்துடன் அன்பு காட்டுபவர்களாகவும், இயேசுவின் போதனைகளை பின்பற்றி நடக்க வேண்டும்.

ஒவ்வொருவரினதும் உள்ளத்திலே உண்மையான இறையன்பு, சகோதரத்துவம், அமைதி மற்றும் சுபிட்சம் என்பன அவர்களை இயல்பாகவே ஆட்கொண்டிருக்கிறது. எனவே ஒவ்வொருவரினதும் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேற இந்நாள் அனைவருக்கும் ஓர் பொன்னாளாக அமையட்டும்.

இயேசுபிரானின் போதனைகளை நினைவு கூர்ந்து அனைவரும் கிறிஸ்மஸை நல்லிணக்கத்தோடும், புரிந்துணர்வோடும் கொண்டாடி மகிழ, எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## அரச ஊழியருக்கான விடுமுறை தினங்களை குறைக்க யோசனை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

அரசாங்க ஊழியர்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள 45 நாள் விடுமுறையை வருடத்திற்கு 25 நாட்களாக குறைப்பது தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன .

இது தொடர்பான தாபனக்கோவை நியதிச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு, ஓய்வூதிய கொடுப்பனவு பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்கத்தின் மேற்பார்வை குழுவுக்கு யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தற்காலிக விடுமுறையாக 10 தினங்களும் ஓய்வு விடுமுறையாக 15 தினங்களும் என விடுமுறைகளை திருத்துமாறு யோசனையில் விடயங்களை முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான செலவு அரசாங்கத்தின் செலவில் 11.4 வீதமாக காணப்படுவதாகவும் ஓய்வூதிய கொடுப்பனவு பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இச்செலவை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் அனைத்து அரசாங்க பிரிவுகளும் பங்களிப்புச் செய்ய வேண்டுமென்றும் அவர் மேற்படி குழுவில் தெரிவித்துள்ளார். அந்தவகையில், அவரினால் 45 யோசனைகள் இதற்காக முன்வைக்கப்பட்டுள்ளன.




தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 10ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 10

### குறள் தரும் சிந்தனை



இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்

வறுமைக்கொடுமையைப் பிறரிடம் இரந்து போக்கிக் கொள்ளலாம் என்று கருதும் கொடுமையைப் போல் வேறொரு கொடுமை இல்லை.

# ஐக்கியத்துக்கான வாய்ப்புகளை ஒருபோதும் தவற விடலாகாது!

நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியான நிலைப்பாட்டில் உள்ளார் என்பதற்கான மற்றொரு சான்றாக கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற முக்கிய சந்திப்பைக் குறிப்பிடலாம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் அரசியல்வாதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டுமொரு தடவை கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பு சிநேகபூர்வமான முறையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சாணக்கியன் இராசமாணிக்கம், ஜீ.கருணாகரன், டீ கலையரசன், குலசிங்கம் திலீபன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.இம்.சீ.எம்.ஹேரத், சுற்றாலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ.ஹேரத் உள்ளிட்டவர்களும் நல்லிணக்கம் தொடர்பிலான நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் அனைத்துத் தரப்பினருடனும், குறிப்பாக சிறுபான்மையினருடன், அதுவும் யுத்தத்தினால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட சமூகமான தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டியது என்பதே தமிழர் தரப்பின் எண்ணமாகும். ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்ற நல்லெண்ண நடவடிக்கைகளை தமிழ் மக்கள் ஆதரவுக் கண்ணோட்டத்துடனேயே நோக்குகின்றனர்.

புலம்பெயர்வாழ் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவைக்கும், பௌத்த சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட 'இமயமலைப் பிரகடனம்' ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த முயற்சியை ஜனாதிபதி மற்றும் மகாசங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வரவேற்றிருந்தனர். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி நல்லிணக்கத்துக்கான தனது சமிக்ஞையை தமிழ்ப் பிரதிநிதிகள் மத்தியில் வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை உருவாக்கி அதன் ஊடாகத் தமது அரசியலை முன்கொண்டு செல்வதிலேயே அதிகம் கவனம் செலுத்தியிருந்தனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து இனங்களையும் இணைத்துக்கொண்டு ஒற்றுமையுடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பது உண்மையில் வரவேற்கத்தக்கது.

இலங்கையில் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனங்களுக்கிடையில் பன்னெடுங்காலமாக நிலவி வருகின்ற முரண்பாடுகள் களையப்பட வேண்டுமென்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுதியான நிலைப்பாடாக உள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கையாக சிறுபான்மை இனங்களின் மத்தியில் காணப்படுகின்ற சந்தேகங்கள் முதலில் அகற்றப்பட வேண்டுமென்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

எனவேதான் தமிழர் தரப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி சந்திப்புகளை நடத்தி வருகின்றார். கடந்த வியாழனன்று தமிழர் அரசியல் தரப்பினருடன் நடந்துள்ள சந்திப்புக்கு முன்னதாக பல்வேறு சந்திப்புகளை அவர் நடத்தியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் அவர் நடத்திய சந்திப்பு, தமிழர் பேரவையுடனான சந்திப்பு ஆகியவற்றை இதற்கான உதாரணங்களாகக் கொள்ள முடியும். கடந்தகால கசப்புகளை மறந்து, புதிய சிந்தனைகளுடன் நல்லிணக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்பதில் அவர் உறுதியாக உள்ளார்.

இதுவொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆரம்பமென்பதை பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை தரப்புகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதியின் சமாதான நல்லிணக்க முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதே நாட்டின் சிறப்பான எதிர்காலத்துக்கு வழியமைக்கும்.

இனமுரண்பாடுகளாலும், மூன்று தசாப்தகால யுத்தத்தினாலும் எமது தாயகம் அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. அனைத்து வளங்களும் எமது நாட்டில் இருந்த போதிலும், இனங்களுக்கிடையில் ஐக்கியம் நிலவாத காரணத்தினால் அபிவிருத்தியில் இன்னும் தன்னிறைவைக் காண முடியாதிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் நாட்டின் இனஐக்கியம் பற்றியே முதலில் அனைத்துத் தரப்பினரும் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சமாதான முயற்சிகள் எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும், அதற்கான ஆதரவை வழங்குவதற்கு நாம் தவறக் கூடாது.

editor.tkn@lakehouse.lk

# நத்தார் பண்டிகை உலகுக்கு வழங்கும் காத்திரமான செய்தி



கிறிஸ்மஸ் விழாவானது இறைவன் மனிதனான வரலாறு பதிவு செய்துள்ள மாபெரும் நிகழ்வாகும். உலக வரலாறே கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்கு பின் எனப் பிரிக்கப்படுகின்ற அளவுக்கு வரலாற்றில் இந்நிகழ்வு முக்கியமான ஒன்றாகி விட்டது.

வரலாற்றையே வகுத்த நிகழ்வாக கிறிஸ்துவின் பிறப்பு அமைகின்றது. கிறிஸ்மஸ் விழா நமக்குத் தரும் ஆழமான அர்த்தம் நிறைந்த உண்மைகளை நாம் மனதில் நிறுத்திப் பார்ப்பது முக்கியமாகும்.

நத்தார் விழா என்பது அடிப்படையில் அன்பின் விழா, கடவுளுடைய அன்புக்கு எடுக்கப்படும் விழா, கடவுள் எந்த அளவுக்கு இந்த உலகத்தை அன்பு செய்தார் என்ற கேள்விக்கு விடை தரும் விழா.

நாம் வாழ்வு பெறும்பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகுக்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது.

கடவுளின் ஒரே அன்பு மைந்தர் இயேசுவின் பிறப்பு ஏற்ற காலத்தில் கனிந்திடும் இறை அன்பாக வெளிப்படுவதை காண்கிறோம். அன்பு வற்றிப்போன இன்றைய மானிட மனங்களில் இறைவனுடைய அன்பை நிறைவுபடுத்தும் விழாவாக அந்த அன்பை அறிந்து அனுபவிக்கும் விழாவாக கிறிஸ்மஸ் விழா அமைகின்றது.

அமைதி, சமாமதானம் இழந்து வாடும் இன்றைய மனுக்குலத்திற்கு இயேசு கொண்டுவந்த சமாதானம் இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாக இருக்கின்றது.

இங்கே இரண்டு விடயங்கள் நமது அவதானத்திற்குரியன. ஒன்று இயேசு கொண்டுவந்த மீட்பை, இரட்சிப்பை அனுபவிப்பது. மற்றது கொண்டாடுவது. முதலாவது நடைபெற்றால்தான் இரண்டாவதற்கு அர்த்தம் இருக்க முடியும்.

ஆனால் இன்றைய உலகின் நடைமுறை என்ன? கிறிஸ்து கொண்டு வந்த மீட்பை, இரட்சிப்பை அனுபவிக்காமல் வெறும் கொண்டாட்டங்களோடு கிறிஸ்மஸ் விழா வழக்கம்போல பழக்கதோசமாக வருடந்த நிகழ்வாக நிறைவு பெற்று விடுகின்றது.

கிறிஸ்துவின் பிறப்பு விழா கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற ஆறுதலின் செய்தியை மகிழ்ச்சியின் செய்தியை நமக்குத் தரும் விழாவாகும். இறைவனுடைய பிரசன்னத்தை உடனிருப்பை உணருகின்ற, அனுபவிக்கின்ற விழாவாக கிறிஸ்மஸ் அமைகின்றது.

தனிமையில் வெறுமையில் வாடும் மனிதனுக்கு இறைவன் தன்னுடன் இருக்கின்றார் என்ற செய்தி முக்கியமான ஆறுதலின் செய்தியாக அமைகின்றது. நாம் விசுவாசிக்கும் கடவுள் எங்கோ வானமேகத்தில் ஆகாய மண்டலங்களில் வாழுகின்ற கடவுள் அல்ல, மாறாக அவர் தம் மக்கள் மத்தியில் வாழுகின்ற, குடிகொள்கின்ற கடவுள் எனபதை இவ்விழா உணர்த்தி நிற்கின்றது.

கிறிஸ்மஸ் விழாவை ஒளிவிழா என்ற பெயரில் கொண்டாடுவதை நாம் அறிவோம். ஏனெனில் இயேசு ஒளியாக உலகத்திற்கு வந்தார்.

இன்றைய உலகம் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. இருளின் செயல்களான தீமைகள் இன்றைய உலகில் மலிந்துவிட்டன. இந்நிலையில் இயேசுவின் பிறப்பு ஒளியின் பிறப்பாக அமைந்துள்ளது.

கிறிஸ்மஸ் காலம் வந்துவிட்டால் மனித மனங்களில் மகிழ்ச்சி பிரவாகித்து ஓடும். உலகத்தின் பெருநகரங்கள் உற்சாக வெள்ளத்தில் மிதக்கும். அலங்கார மின் விளக்குகள் அழகழகாக ஒளிரும். கிறிஸ்மஸ் பாப்பா, கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்மஸ் கேக், கிறிஸ்மஸ் கீதங்கள். கிறிஸ்மஸ் விடுமுறை, கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் என உலகம் உற்சாகத்தில் திளைக்கும்.

கிறிஸ்மஸ் அண்மித்தால் எல்லோருடைய உள்ளங்களிலும் புத்துணர்வுகளைகட்டி விடும். ஆரோக்கியமான கொண்டாட்டங்கள் மனித வாழ்வுக்கு தேவையானதே. ஆனால் கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படையை மறந்துவிட்டு இயேசு கொண்டுவந்த பாவ மன்னிப்பின் அனுபவத்தை புதுவாழ்வு அனுபவத்தை மறந்துவிட்டு வெற்று ஆடம்பரங்களிலும் கொண்டாட்டங்களிலும் மட்டும் மூழ்கிவிடுவது முறையல்ல.

மனிதன் இறைவனைப் புறக்கணித்தாலும் அந்த இறைவனோ தனது அளவுகடந்த அன்பினால் மனிதனைத் தேடி வருகின்றார். இதுதான் கடவுளின் இரக்கம், இதுதான் கடவுளின் இயல்பு.

கிறிஸ்மஸ் விழா என்பது அடிப்படையில் அன்பின் விழா அமைதியின் விழா, சமாதானத்தின் விழா மீட்பின் விழா, இரட்சிப்பின் விழா, இறைபிரசன்னத்தின் விழா, ஒளியின் விழா, மகிழ்ச்சியின் விழா.

இந்த உலகத்தை நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழும் இல்லிடமாக மாற்றுவோம்!

அருட்தந்தை
தமிழ்நேசன் அடிகளார்...

# தமிழக நகைச்சுவை நடிகர் போண்டாமணி காலமானார்



தமிழ்த்திரையுலகின் ஜனரஞ்சக நகைச்சுவை நடிகர் போண்டாமணி நேற்று (24.12.2023) தனது 60 ஆவது வயதில் காலமானார். 175 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார். போண்டாமணியின் இயற்பெயர் பெயர் கேதீஸ்வரன். இவர் இலங்கை, மன்னாரில் பிறந்தவர். இவருடன் பிறந்த 16 சகோதரர்களில் 8 பேர் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் காலமாகி விட்டார்கள்.

எம்.மாரிமுத்து செட்டியார்_ மகேஷ்வரி தம்பதியரின் மகனாக போண்டாமணி 15 செப்டம்பர் 1963 இல் பிறந்தார். மன்னாரில் 'மறுமலர்ச்சி விநாயகர் கலாமன்றம்' என்ற பெயரில் மன்றமொன்றைத் தொடங்கி நண்பர்களோடு கலைநிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இலங்கையிலிருந்து அகதியாக இராமேஷ்வரம் சென்று பல முயற்சிகளுக்குப் பின்னர் நடிகரானார். நடிகர் வடிவேல் இவருக்கு அதிக படங்களில் நடிப்பதற்கு வாய்ப்பளித்தார். பூவே பூச்சூடவா (2017), எங்க வீட்டு மீனாட்சி (2022) போன்ற தொலைக்காட்சி தொடர்களிலும் இவர் நடித்துள்ளார். கடந்த சில வருடங்களாக சிறுநீரகக் கோளாறினால் சிகிச்சை பெற்று வந்த போண்டாமணி 2023 டிசம்பர் 24 அன்று சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் காலமானார்.

போண்டாமணியின் மறைவுக்கு பலரும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# இந்தியாவில் கொரோனா தொற்று வேகமாக அதிகரிப்பதால் மக்கள் மீண்டும் அச்சம்!



கொரோனா பாதிப்பு இந்தியாவில் திடீரென அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து உலகம் பெரும் போராட்டத்திற்குப் பிறகு மீண்டுள்ள நிலையில், இப்போது மீண்டும் வைரஸ் பாதிப்பு அதிகரிப்பது பலருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் 655 பேருக்கு புதிதாக கொரோனா உறுதியாகியுள்ளது. குறிப்பாகக் கேரளாவில் மட்டும் 424 பேருக்கும், தமிழ்நாட்டில் 21 பேருக்கும் கொரோனா உறுதியாகியுள்ளது. தமிழகத்தின் அண்டை மாநிலமான கர்நாடகாவில் வைரஸ் பாதிப்பு 104 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் இப்படி திடீரென வைரஸ் பாதிப்பு அதிகரிக்க ஓமிக்ரோன் ஜேஎன்.1 திரிபு காரணம் என்று கூறப்படுகிறது.

"ஏற்கனவே போட்டுக் கொண்ட கொரோனா தடுப்பூசிகளே நம்மை இதில் இருந்து பாதுகாக்கும். 60 வயதைக் கடந்த வர்கள், இணை நோய் உள்ளவர்கள் மட்டும் இப்போது கூடுதல் டோஸ் தடுப்பூசியை எடுத்துக் கொள்ளலாம் . மற்றவர்களுக்குக் கூடுதல் தடுப்பூசி தேவையில்லை. அதேபோல முதியவர்களும், தொற்றாநோய் உள்ளவர்களும் வெளியே செல்லும் போது கவனமாக இருக்க வேண்டும்" என்று இந்திய மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஓமிக்ரோன் துணை திரிபு ஒன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்படுவது இது முதன் முறை இல்லை. ஏற்கனவே பல துணை திரிபுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 400 துணை திரிபுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஜே.என்.1 கொரோனா வகையின் முக்கிய அறிகுறிகள் காய்ச்சல், மூக்கடைப்பு மற்றும் இருமல் ஆகியவையாகும். சிலருக்கு வயிற்றுப்போக்கு மற்றும் கடுமையான உடல்வலிகள் இருக்கலாம், இவை பொதுவாக இரண்டு முதல் ஐந்து நாட்களில் குணமாகும்.

இந்தியாவில் கொரோனா பாதிப்பு அதிகரித்தாலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை பெரியளவில் அதிகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அல்குர்ஆனுக்கு சேவைகளை வழங்கிவரும் மன்னர் பஹ்த் அல்குர்ஆன் அச்சக வளாகம்

சவூதி அரேபியா உலகளாவிய ரீதியில் பல்வேறுபட்ட சேவைகளை முஸ்லிம்களுக்கு செய்து வருவது வெளிப்படையான ஓர் அம்சமாகும். அச்சேவைகளில் குறிப்பிட்டு கூறத்தக்க,சிறப்பான ஒரு விடயமாக மதீனாவில் உள்ள 'மன்னர் பஹ்த் அல்குர்ஆன் அச்சக வளாகம்' (king Fahd Quran complex) திகழ்கின்றது.

இதற்கான அடிக்கல் 1982 இல் நாட்டப்பட்டு 1985 ஆம் ஆண்டு மன்னர் பஹ்த் அவர்களினால் மதீனாவில் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவின் போது மன்னர் பஹ்த் பேசுகையில் "இன்றைய நாளில் சிறந்த தொரு கனவு நிறைவேறியதாக நான் உணர்கின்றேன். இதனூடாக எனது மார்க்கத்திற்கும்,நாட்டிற்கும், முழு உலக முஸ்லிம்களுக்கும் சேவை செய்ய இறைவனிடம் ஆதரவு வேண்டுகின்றேன்" எனக் கூறியிருந்தார்.

இவ்வச்சகம் அல்குர்ஆனுக்கு செய்யப்பட்ட மிகப் பெரும் சேவையாகவும், மதீனாவின் மிகப் பெரும் அடையாளங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. இங்கு 70 இற்கும் அதிகமான மொழிகளில் அல்குர்ஆன் மொழிபெயர்க்கப்படுவதுடன், வருடாந்தம் 18 மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் வெளியிடப்படுகின்றன. மேலும் இதனூடாக உலகின் பல்வேறுபட்ட மொழிகளில் அல்குர்ஆன் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படுவது விசேட அம்சமாகும். இதில் 39 ஆசிய மொழிகள்,16 ஐரோப்பிய மொழிகள்,19 ஆபிரிக்க மொழிகள் உள்ளடங்குகின்றன. அத்தோடு காலத்திற்குக் காலம் தேவையுணர்ந்து மொழிபெயர்ப்புப் பணியில் ஒவ்வொரு நாட்டு மொழிகளும் சேர்க்கப்படுகின்றன. உலகின் பிரபல்யமாக ஓதப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட கிராத் வகைகளிலும் குர்ஆன் அச்சிடப்பட்டு வெளியிடப்படுவது இன்னுமோர் சிறப்பம்சாகும்.





மேற்கூறப்பட்டவைகளுடன் சேர்த்து குர்ஆன், ஹதீஸ் சம்பந்தமான ஆய்வுகளும் இங்கே மேற்கொள்ளப்படுகின்றன. இதனை சவூதி அரேபிய இஸ்லாமிய அலுவல்கள், அழைப்பு, வழிகாட்டல் அமைச்சு மேற்பார்வை செய்கின்றது.

அச்சிடப்பட முன்னும் அதன் பின்னும் நிபுணத்துக் குழுவினரால் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட பின்னரே பிரதிகள் வெளியிடப்படுகின்றன. இதனால் சிறிதளவு அச்சுப்பிழை கூட வருவதற்கான வாய்ப்பே இல்லை.

உண்மையில் எமது நாட்டில் கூட பெரும்பாலான வீடுகளில் இதில் அச்சடிக்கப்பட்ட அல்குர்ஆன் பிரதிகள் இல்லாமலிருக்காது. வருடா வருடம் ஹஜ்ஜுக்குச் செல்லும் ஒவ்வொருவருக்கும் இதன் அல்குர்ஆனிய பிரதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

உம்ரா,ஹஜ் பயணங்கள் மேற்கொள்வோர் மதீனாவின் ஓர் அடையாளமாகத் திகழும் இக்கட்டடத்தை தாராளமாக பார்வையிடுவதற்கான அனுமதியையும் அச்சகத்தின் நிர்வாகம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அஷ்ஷெய்க் ஏ.டப்ளியு.எம்.அல்தாப்...
(மதனி)




# சிவதொண்டர் வதிவிட பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(பருத்தித்துறை விசேட நிருபர்)



மாணவர்களுக்கான சிவதொண்டர் வதிவிட பயிற்சி நெறிகள் கடந்த சனிக்கிழமை (23)ஆம் திகதி ஆரம்பமானது. அகில இலங்கை சைவ மகா சபையின் பொது செயலாளர் மருத்துவர் பரா நந்தகுமார் தலைமையில் ஆரம்பமானது.

வட்டு, இந்துக் கல்லூரியில் தரம் 8 மற்றும் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்காக இந்த வதிவிட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலிகாமம் மற்றும் தீவக கல்வி வலயங்களின் ஒத்துழைப்புடன் அகில இலங்கை சைவ மகா சபை, இந்த பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக சைவ மாகாசபையின் கீதம் இசைக்கப்பட்டு, சைவத்திற்கும் தமிழுக்குமாக உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தி நந்திகொடியேற்றப்பட்டது.

2025 ஆம் ஆண்டில், இம்மாணவர்கள் மூலம் பாடசாலை சிவதொண்டர் அணியை உருவாக்கி போதையற்ற நேர் சிந்தையுடைய ஆன்மீகம் சார் மற்றும் அறம்சார் இளம் சந்ததிகளை உருவாக்கும் நோக்கில் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# யாழ்,வைத்தியசாலையில் மேலதிக விடுதிகள் திறப்பு

(யாழ்.விசேட நிருபர்)

டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பதால், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் தற்காலிகமாகத் திறக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இதுபற்றித் தெரிவித்தார்.

கடந்த ஒரு சில வாரங்களாக, பெருமளவான டெங்கு நோயாளிகள் யாழ்,போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால், படுக்கைகளின்றி நோயாளர்கள் சிரமப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை கருத்திற்கொண்டே மேலதிகமாக இரண்டு விடுதிகள் திறக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# மரக்குற்றிகளை கடத்தும் முயற்சிகள் முறியடிப்பு



புதுக்குடியிருப்பு பிரதேசத்தில், மரக்குற்றிகளை கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டது. டிப்பர் வாகனத்துக்குள் மறைத்து இந்த மரக்குற்றிகளை கடத்த முயற்சிக்கப்பட்டது.

இதன்போது வாகனத்தின் சாரதியை கைது செய்த பொலிஸார் வாகனத்தையும் கைப்பற்றினர். புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் இருந்து டிப்பர் ஒன்றில் சூட்சுமமான முறையில் பாலை மரக்குற்றிகளை கடத்தப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.கே.ஹேரத் தலைமையிலான பொலிஸார் (23) ஆம் திகதி இந்த கடத்தல் முறியற்சியை முறியடித்தனர்.

கல்லாறு தர்மபுரத்தினை சேர்ந்த வாகன சாரதியே இதன்போது கைது செய்யப்பட்டார்.

வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல இம்மரக்குற்றிகள் கடத்தப்படவிருந்தன.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சுற்றிவளைப்புக்கள்:250 பேர் கைது

(ஓமந்தை விஷேட நிருபர்)



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழு தினங்கள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில், 250 பேர் கைதாகியுள்ளனர். இவர்களில், 113 பேர், போதைப்பாவனையாளர்களாவர்.

இதில், 25 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இச்சுற்றி வளைப்புக்கள் கடந்த 17 முதல் 24 வரை மேற்கொள்ளப்பட்டிருந்தன. பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து இவ்விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

நாடளவிய ரீதியில் போதைவஸ்து பாவனை மற்றும் விற்பனைகளைத் தடுக்கும் வகையில் "யுக்திய" விசேட இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிணங்கவே முல்லைத்தீவு மாவட்டத்திலும் இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன.

# வடக்கில் கொரோனா அச்சமில்லை

(யாழ்.விசேட நிருபர்)

வடக்கில் கொரோனா அச்சம் இல்லை எனவும், டெங்கின் தாக்கம் அதிகரித்துச் செல்வதால், டெங்கு தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென வடமாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளரும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளருமான த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று எவையும் நீண்டகாலமாக வடமாகாணத்தில் பதிவாகவில்லை. ஆனால் அண்மைய நாட்களாக டெங்கு நோய் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றன. தினமும் சராசரியாக 100 பேர் வரையில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

எனவே, வடமாகாண மக்கள் கொரோனா தொற்று தொடர்பில் அச்சமடைய தேவையில்லை. டெங்கு நோய் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தெரிவித்தார்.






# இளைஞருடன் சென்ற இளம் யுவதி பாவற்குளத்தில் மூழ்கி மரணம்:

(வவுனியா விசேட நிருபர்)



வவுனியா, பாவற்குளம் நீர்த் தேக்கத்திற்கு இளைஞருடன் சென்ற இளம் யுவதி ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளாதாக உளுக்குளம் பொலிஸார் இதைத் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, பாவற்குளம் நீர்த்தேக்கம், வான் பாய்ந்து வருகிறது.இந்நிலையில், இக்குளத்திற்கு இளைஞர் ஒருவருடன் இளம் யுவதி அங்கு சென்றுள்ளார். நீர்த்தேக்க பகுதியில் நின்றபோது இந்த யுவதி, நீரில் வீழ்ந்துள்ளார். சிலர் உடனடியாக விரைந்து செயற்பட்டு யுவதியை மீட்டு, பாவற்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

எனினும், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் முன்னரே யுவதி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. யுவதியின் சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வவுனியா, இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய ஜன்சிகா என்ற யுவதியே நீரில் வீழ்ந்து மரணமடைந்தார்.


## பெயர் மாற்றம்

மட்டக்களப்பு கதிரவெளி புதூர் இலங்கை ஜனநாயக சோஷலிச குடிமகனாகிய எனது பெயர் கதிர்காமத் தம்பி சசிதரன் என்று அனைத்து ஆவணங்களிலும் எனது பெயர் குறிப்பிடப்பட வேண்டும், எனது பதிவுப் பிரகாரம் தவறுதலாக பெண் என்றும் சசிகலா என்று குறிப்பிட்டுவிட்டார்கள்.

## பெயர் மாற்றம்

காத்தான்குடி-02, பழைய கல்முனை வீதி, பரிசாரியார், ஒழுங்கை எனும் முகவரியைச் சேர்ந்த முகைதீன் பாவா பௌஸர் (பதிவு இலக்கம் 1480) ஆகிய நான், எனது பெயரை பௌஸர் முகைதீன் பாவா முஹம்மட் என மாற்றிக்கொண்டேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

**- முகைதீன் பாவா முஹம்மட் பௌஸர்**

## பெயர் மாற்றம்

பாதுக்கை, இஹள போபெ, இசுரு உயன இல 103/C/2 எனும் முகவரியில் வசிக்கும் லீலாநந்த சஜீவனி நெனும் விஜேரத்ன தே.அ.அ இல 198065401583 கொண்ட நான் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை நெய் சாஜிதா டேன் என மாற்றிக் கொண்டேன் என இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன். இனிமேல் எனது புதிய பெயரிலேயே சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என அறியத்தருகின்றேன்.

**லீலாநந்த சஜீவனி நெனும் விஜேரத்ன.**


# மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் அவசியம் தேவை:

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு!

(வவுனியா விசேட நிருபர்)

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை என முன்னாள் தேர்தல் ஆணையாளரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் மற்றும் பீபிள்ஸ் பவுண்டேசன் என்பன இணைந்து ''எமது உரிமைகள், எமது வளங்களை பாதுகாக்க மாகாண சபையை வலுப்படுத்துவோம்'' என்ற தொனிப்பொருளில் செயலமர்வை நடத்தியது. கண்டி வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அலுவலக கேட்போர் கூடத்தில் இது நடைபெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் மாகாணசபை அவசியம். மாகாணசபை இந்நாட்டுக்கு அவசியமில்லை என யாராவது குறிப்பிடுவார்களாயின் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையும் தேவையும் இல்லை.

மாகாண சபை மக்கள் தற்போது அரச அதிகாரிகளால் செயற்படுத்தப்படுகிறது. இதனால் மாகாண சபை குறித்தான கேள்வியொன்றை எழுப்பும் போது அரச அதிகாரிகள் அதற்கு நேரடியாக பொறுப்பேற்காமல் உள்ளனர். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இந்நிலை ஏற்படாது.

பொறுப்புடன் பதில்கூற வேண்டியவர்கள் மக்கள் பிரதிநிதிகளே!

தற்போது மாகாண சபை செயற்றிட்டங்களில் மக்கள் கருத்துக்களை கேட்டறிய வாய்ப்பு இல்லை. எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை தெரிவு செய்ய உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2023.12.22
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5336 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,158,204.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 3 0 5 0 9 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3578 — சீட்டிழுப்பு திகதி 2023.12.22 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,548,036.04
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 14 18 45 53 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 40546

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1684 — 2023.12.22 — 00898 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.418,590,678.00
ஆங்கில எழுத்து U — சுப்பர் இலக்கம் 15 — வெற்றி இலக்கங்கள் 07 28 45 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2023.12.22 — சீட்டிழுப்பு இலக்கம் 0162
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 8 0 4 8 3 5 — L7 எழுத்து M
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.21,865,656.60

ராசி சுப பலன் — திகதி 2023.12.22 — சீட்டிழுப்பு இலக்கம் 645 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,232,557.44
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 22 48 51 56 — தனயோக இலக்கம் 55844 — நாளுக்கான விதி எண் 03

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1366 — 2023.12.22 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,551,084.32
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 21 68 71 77 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 37341

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2023.12.23
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5337 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,244,396.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 6 4 5 7 7 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3579 — சீட்டிழுப்பு திகதி 2023.12.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,700,705.64
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 03 08 23 68 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 56080

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1685 — 2023.12.23 — 52589 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.418,670,494.00
ஆங்கில எழுத்து X — சுப்பர் இலக்கம் 12 — வெற்றி இலக்கங்கள் 01 55 68 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2023.12.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0163
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 6 9 0 0 5 3 — L7 எழுத்து T
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.21,865,656.60

ராசி சுப பலன் — திகதி 2023.12.23 — சீட்டிழுப்பு இலக்கம் 646 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 38 41 57 58 — தனயோக இலக்கம் 10855 — நாளுக்கான விதி எண் 09

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1367 — 2023.12.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,575,009.12
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 23 26 34 47 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46639

# மகிழ்ச்சி, சமூக நல்லிணக்கத்தை கிறிஸ்மஸ் விழா நமக்கு தரட்டும்

## சுப்பையா ஆனந்தகுமார் கிறிஸ்மஸ் வாழ்த்து



அனைவருக்கும் நல்ல ஆராக்கியம், மகிழ்ச்சி மற்றும் சமூக நல்லிணக்கத்தை கிறிஸ்மஸ் தரட்டும். கிறிஸ்தவ சகோதரா் கள், சகோதரிகளுக்கு எனது கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினருமான சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள கிறிஸ்மஸ் வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

"மனித நேயப் பண்புகளின் விழாவாக கிறிஸ்மஸ் கொண்டாடப்படுகிறது. ஏசு கிறிஸ்து மனித நேயம், அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை போதித்தார். அமைதி, சகோதரத்துவம், மத நல்லிணக்கம் ஆகியவற்றை கடைபிடிப்பதில் நம்மை அற்பணித்து கொள்வோம். அவரது போதைகளை நமது வாழ்க்கையின் முன்னேற்றதுக்கு ஒரு எடுத்துக்காட்டாக கொள்வோம்.

இலங்கை மிகவும் நெருக்கடியான காலகட்டத்தை கடந்து வருகிறது. கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீட்டெடுத்துள்ளார். அடுத்த ஆண்டு நாடு மேலும் முன்னேற்றப்பாதையில் செல்லும். அதற்கான பொருளாதார அடித்தளத்தை ஜனாதிபதி இட்டுள்ளார். அருள் அவதாரமான கிறிஸ்து பிறந்த நாளில் அகிலம் முழுவதும் அமைதியும், மகிழ்ச்சியும் திகழ வாழ்த்துவதோடு, என் அன்புக்குரிய இலங்கைவாழ் கிறிஸ்துவப் பெருமக்கள் அனைவருக்கும் வாழ்த்துகளை கூறிக்கொள்கிறேன்.

அடுத்த கிறிஸ்மஸ் கொண்டாடங்கள் நிச்சயமாக ஒரு வலுவான பொருளாதார நாட்டில் நாம் கொண்டாட வழிபிறக்க வேண்டும்." எனவும் சுப்பையா ஆனந்தகுமார் தமது வாழ்த்தில் கூறியுள்ளார்.



உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க அதிகாரிகளுக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம் இணைந்து அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக தமிழ் மொழி பாடநெறி பயிற்சியை வழங்கியது. பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த அதிகாரிகள், தமிழர் பாரம்பரிய முறையில் திறமைகளை வெளிப்படுத்தியதுடன், பயிற்றுவிப்பாளர்களையும் பாராட்டினர்.

## நீண்ட இடைவெளிக்குப் பின்...

இரேஷா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கம்பளை அட்கல பிரதேசத்தில் வசிக்கும் இவர் உயிரிழந்த பின்னர் PCR பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் அவருக்கு கொவிட்19 வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது.

கொவிட் 19 நோய்த் தொற்று நாட்டில் நீங்கிய பின்னர், நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த மரணம் பதிவாகியுள்ளது. இறந்தவர் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவரது உறவினர்களுக்கும் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

தற்போது, கொவிட்19 தொற்றுக்குள்ளானவர்களின் சடலங்களின் இறுதிக் கிரியைகளை சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்தாத நிலையில், சாதாரண சடலத்தை ஒப்படைப்பது போன்று சடலத்தை உறவினர்களிடமே ஒப்படைக்க வைத்தியசாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இன்றைய பலன்கள்


## ( 25. 12. 2023 )



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா


(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**




போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:**



ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:**



மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

**கடகம்:**



தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.

**சிம்மம்:**



எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.

**கன்னி:**



தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.

**துலாம்:**



நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**விருச்சிகம்:**




தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**தனுசு:**



ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.

**மகரம்:**



உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.

**கும்பம்:**



லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.

**மீனம்:**



அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

## மாகாண, மாவட்ட மட்டங்களில்...

இதுவரை 60 டெங்கு அபாய வலயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த வருட ஆரம்பம் முதல் நாடு முழுவதிலும் இருந்து 84,807 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 50 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் டாக்டர் சமரவீர தெரிவித்தார். ஒருவருக்கு 48 மணி நேரத்திற்கு மேல் காய்ச்சல் இருந்தால், தகுதியான மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும் என்றும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் பராசிட்டமால் தவிர வேறு வலி நிவாரணி மருந்துகளை பயன்படுத்தக் கூடாதென்றும் அவர் கூறினார்.

அத்துடன் நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் மிகத் தீவிரமாக பரவும் ஆபத்தான நிலை உருவாகியுள்ளதால் அதனைக் கட்டுப்படுத்துவதில் அனைத்து நிறுவனங்களினதும் ஒத்துழைப்புக்கள் அவசியமென்றும் அதற்கான டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்த சுற்று நிருபம்

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் சபைகளின் தலைவர்களுக்கும் இந்த சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

தற்போதைய புள்ளி விபரங்களின்படி மேல் மாகாணம் மிகுந்த எச்சரிக்கை மிகுந்த வலயமாக இனம் காணப்பட்டுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் தீவிரமாக பரவி வருவதாகவும் அந்த செயலகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் டெங்கு நோய் தீவிரமாக பரவுவதைத் தடுப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தேசிய மற்றும் மாகாண, மாவட்ட மட்டத்திலும் முன்னெடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் நிறுவன மட்டத்திலும் கிராமிய மட்டும் வீடுகள் மட்டத்திலும் சுகாதார பிரிவினரின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனைத்து நிறுவனங்களின் பிரதானிகளும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியது அவசியம் என்றும் அந்த செயலகம் தெரிவித்துள்ளது.

நுளம்புகள் உருவாகும் எச்சரிக்கை மிகுந்த பகுதிகள் இணங்காணப்பட்டுள்ள நிலையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், நிர்மாணப் பணிகள் இடம் பெறும் இடங்கள், பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், மீன்பிடி நடவடிக்கை இடம் பெறும் பிரதேசங்கள், வீடுகள் மற்றும் நகர் பிரதேசங்கள், பொது இடங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது.

அந்த வகையில் தமது நிறுவன சுற்றாடலில் டெங்கு நுளம்புகள் உருவாவதை தடுப்பது அந்த நிறுவனங்களின் பிரதானிகளின் பொறுப்பாகும்.

டெங்கு அற்ற சூழலை உருவாக்குவதற்காக அனைத்து அரச மற்றும் அரச அனுசரணை நிறுவனங்கள்,தனியார் நிறுவனங்கள் நிர்மாணப் பணிகள் மற்றும் வேலைத்தளங்கள் பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் டெங்கு பரவுவதை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## மகிழ்ச்சி, அமைதியும்...

உலகுக்குக் கற்றுத் தந்த அற்புதமான நத்தார் பண்டிகையை, கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, இன,மத வேறுபாடின்றி உலக மக்கள் பலரும் கொண்டாடி வருகின்றனர்.அன்பும், ஆதரவும்,அமைதியும், சமாதானமும்,ச மத்துவமும் நிறைந்த உலகைப் படைக்க இயசு தனது அன்பின் கரங்களை நீட்டி, துயரங்கள் நிறைந்த இதயங்களை அமைதிப்படுத்தினார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உலகலாவிய கிறிஸ்தவர்கள் டிசம்பர் மாதத்தில் நத்தார் தினத்தை தேவாலய மணிகள் அடித்தும், இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் மெழுகுவர்த்தி வழிபாடுகளுடனும் கொண்டாடுகிறார்கள். இயசு கிறிஸ்து கொண்டுவந்த அன்பு, சகோதரத்துவம், ஏழைகளுக்கு உதவுதல் என்ற செய்தியில் வாழ்ந்தால் மட்டுமே நத்தார் மகிழ்ச்சி தரும்.

சிறிய குடிசைகள் முதல் பெரிய வீடுகள் வரை மக்கள் தங்களால் இயன்ற விதத்தில் நத்தார் பெருவிழாவைக் கொண்டாடு கின்றனர்."நல்லவன் தன் இதயத்தில் பொக்கிஷமாக வைத்த நன்மையை விதைப்பான்,தீயவன் தன் இருதயத்தில் பொக்கிஷமாக வைத்த தீமையை விதைப்பான்" என்று பைபிள் சொல்கிறது. நன்மையும் மனித நேயமும் நிறைந்த ஒரு நாட்டுக்காக உலகுக்காக நம்மை அர்ப்பணிக்க இயேசு வழி காட்டியுள்ளார் என்பதை இது தெளிவாக்குகிறது.

பல வருடங்களாக இலங்கை கிறிஸ்தவ மக்கள் ஈஸ்டர் மற்றும் நத்தார் பண்டிகைகளை ஒன்றாகக் அனுபவிக்கும் சூழ்நிலையில் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்காததாலும், குற்றவாளிகள் அடையாளம் காணப்படாததாலும், பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.ஈஸ்டர் தாக்குதலில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

நத்தார் செய்தி பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும் அமைதி உண்டாவதாக என்பதாகும்.

## அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து...

குற்றங்களைத் தடுப்பதற்கும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அப்பணிகளிலிருந்து விசேட அதிரடிப் படையினரை நீக்கவும் , அப்பணிகளை முன்னெடுப்பதற்கான மாற்றுவழி தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இதற்காக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இது,தொடர்பில் ஆராயப்பட்டது. இப்பணிகளைப் பொறுப்புடன், உரிய வகையில் முன்னெடுப்பதற்கும், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இப்பணிகளை முகாமைத்துவம் செய்யக்கூடியதுமான வேலைத்திட்டம் ஒன்றை பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் விரைவில் உருவாக்குமாறு சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

## பொறுப்புகளை நிறைவேற்ற...

முன் நிறுத்தி, மாட்டு தொழுவத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவைக் கொண்டாடும் நாம், ஒரு போதும் யதார்த்தத்தை மறக்க கூடாது.

மானிடர்களைப் பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காக சிலுவையில் உயிர்த் தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்ந்து, கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். தம்மை எதிர்ப்பவர்களையும், தமக்கு இடையூறு செய்வோரையும் மன்னித்து அவர்கள் மீதான கோபத்தையும், வெறுப்பையும் போக்கிக் கொள்ளுமாறு கிறிஸ்தவ மதம் நமக்கு கற்பிக்கிறது. கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தினால் சிறந்த மாற்றங்கள் கிடைக்கும். அவ்வாறான மாற்றங்கள் உளப்பூர்வமானதும் உண்மையானாதுமாக இல்லாதபோது கிறிஸ்மஸ் கொண்டாட்டம் அர்த்தமற்றாகிவிடும். பல்வேறு சவால்கள் நம்முன் நிற்கின்ற தருணத்தில், நாம் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். நாட்டில், நமக்கிருக்கும் சவால்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொண்டு, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டுமென அழைப்பு விடுக்கிறேன்.

உலக மக்கள் அனைவருக்கும் அன்பும், அமைதியும் நிறைந்த பண்டிகையாக இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகை அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

## ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தில்...

சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை வழங்கவுள்ளோம். இதற்கு சகல பொது அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும். பொது மன்னிப்பின் அடிப்படையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்றார்.

## 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு...

தெரிவித்துள்ளது. அத்துடன், பெருமளவு போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அந்த போதை வஸ்து தொடர்பான விபரங்களையும் பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அந்தவகையில் 09 கிலோ மற்றும் 82 கிராம், ஹெரோயின் 04 கிலோ மற்றும் 679 கிராம், ஐஸ் 272 கிலோ மற்றும் 967 கிராம், கஞ்சா 944,651 கஞ்சா செடிகள் 117 கிலோ மற்றும் 312 கிராம், மாவா 35 கிலோ மற்றும் 752 ஏஸ், 989 கிராம் ஹசீஸ், 3 கிலோ மற்றும் 154 கிராம் தூள், 520 கிராம் குஸ், 65,924 போதை வில்லைகள் ஆகியவை இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளதாக தலைமையகம் தெரிவித்துள்ளது. இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலம் கைது செய்யப்பட்டுள்ள 13,666 பேரில் 717 சந்தேகநபர்களை தடுத்துவைத்து விசாரணை செய்யும் உத்தரவு பெறப்பட்டுள்ள து. அதேபோன்று 174 சந்தேகநபர்கள் தொடர்பில் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1,097 சந்தேக நபர்கள் புனர்வாழ்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பின் போது தேடப்பட்டுவரும் சந்தேகநபர்கள் பட்டியலிலுள்ள 4,665 பேரில் 1,107 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

## இயேசுவின் பிறப்பு...

மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் மீதும் கருணையைப் பகிர்ந்து கொள்வதற்கான அற்புதமான பாடத்தை வலியுறுத்திய இயேசுவின் போதனைகளின்படி வெறுப்பு மற்றும் குரோதத்தை ஒழித்து, பொருளாதார ரீதியாகவும் உணவுப்பயிர்கள் ரீதியாகவும் செழிப்புற்று விளங்கும் சுபீட்சமானதொரு இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக இந்த நத்தார் தினத்தை ஒரு புதிய ஆரம்பமாக ஆக்கிக்கொள்வோம்.

ஏழை, பணக்காரன், ஆண், பெண், சாதி, நிறம், போன்ற சகல வேறுபாடுகளையும் களைந்து, அமைதி, நல்லிணக்கம், சமத்துவம் என்ற அற்புதப் பாடங்களின் அடிப்படையில், மற்றவர்களுக்கு உதவி செய்து, அர்த்தமுள்ள வகையில் கொண்டாடி மகிழும் மகிழ்ச்சி நிறைந்த நத்தார் பண்டிகைக்கு எனது நல்வாழ்த்துகள்.

## ஐ.தே.க, புதிய தலைமைத்துவ...

இச்சபையில் உள்ள ஏனைய சில விடயங்கள் அதிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

ருவன் விஜேவர்த்தன, ரவி கருணாநாயக்க, அகிலவிராஜ் காரியவசம், சாகல ரத்நாயக்க, ஹரீன் பெர்னாண்டோ, நவீன் திஸாநாயக்க மற்றும் வஜிர அபேவர்த்தன ஆகியோர் இந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையில் உள்ளடங்குகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நிலையான கட்சி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஒருவரை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நியமிக்கப்படுபவர் தொடர்பில் இறுதித் தீர்மானம் இந்தவாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

## பண்டிகைக்கால விடுமுறையில்...

தொடர்பில் அவதானம் செலுத்தி இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வார இறுதியில் மேற்கொள்ளப்படும் தேவையற்ற பராமரிப்பு பணிகளால், மேலதிக நேர கொடுப்பனவுகளுக்காக பாரிய செலவுகள் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 56 இலங்கையரை பாதுகாப்பாக...

மியன்மாரின் மியாவாடி பகுதியில் தற்போது 56 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் மியன்மார் அரசு மற்றும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## 1,955 கிலோ சட்டவிரோத...

சந்தேகத்திற்கிடமான வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்று சோதனையிடப்பட்டது. .

அங்கு சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் அறுபத்து மூன்று (63) பொதிகளில் அடைக்கப்பட்ட சுமார் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து (1955) கிலோ பீடி இலைகள் லொறியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

## உலகில் அந்தகார... (3ஆம் பக்க தொடர்ச்சி)

யை, நாம் மாற்றியவர்கள்.

எவரையும் எவரும் அடிமை என்று கொள்ளாத, சரணடைவில்லாத சமாதானம், எல்லா மக்களும் சமன் என்ற சமவுரிமை,.. சமூக நீதி,.. அன்பும் கருணையும் எமது மக்களை ஆளவல்ல நீதிச்சட்டம்,.. இவைகளை அடைவதற்கே தீர்க்கதரிசனமாக எமது பாதையை நாம் மாற்றியவர்கள். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் எமது தீர்க்கதரிசனங்கள் ஒரு போதும் ஒழிந்து போகாது,..

எமது தீர்க்கதரிசனங்களை இழித்துரைத்தவர்கள் இத்தனை இரத்தப் பலிகளுக்கு பின்னரே, மனந்திருந்தி எமது வழிக்கு வருவதாக கூறுகின்றனர்.

சமாதானத்தின் எதிரிகளாகவும், விடிந்தெழும் காலத்தின் விரோதிகளாகவும் இருந்து, கற்பாறைகளில் விதைக்க முனைந்தவர்களை எமது மக்கள் மன்னிப்பார்கள், மறக்க மாட்டார்கள்,..

அன்பும் கருணையும் அவனியை ஆளட்டும்!,..அனைவருக்கும் நத்தார் தின வாழ்த்துக்காள்!,..

## அனைவரும் மகிழ்ச்சியுடன்... (3ஆம் பக்க தொடர்ச்சி)

இரக்கத்தையும், அன்பையும் இவ்வுலகுக்கு கொண்டு வந்தார். அதைப் போலவே இந்த உலகில் அமைதி நிலவ வேண்டும்.நீதி இருக்க வேண்டும் , உண்மைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆசித்தார். கிறிஸ்து பிறப்பு விழா எங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான விழா.ஆயினும் இலங்கை நாட்டிலே மக்கள் பல வகையில் கஷ்டப்படுகின்றனர் .

இறை இயேசுவின் வருகையினால் மக்கள் இந்த நிலையில் இருந்து விடுபட வேண்டும்.

அவர்கள் இதையும் விட ஒரு நல்ல வாழ்வு வாழக்கூடியதாக வளம் பெற வேண்டும் என்றும் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எம்மிடமிருந்து அனைவரும் மகிழ்ச்சியோடும், திருப்தியோடும் வாழ இறைவன் எங்களுக்கு அருள வேண்டும்.

## இயேசுவின் உயரிய... (3ஆம் பக்க தொடர்ச்சி)

அதுவே உண்மையான மகிழ்ச்சி. ஆகவே இந்த கிறிஸ்மஸ் விழாவானது துன்பங்கள், துயரங்கள், வறுமை, இயற்கையின் இடர்கள், நோய்கள் அனைத்திலிருந்தும் அனைவருக்கும் விடுதலை தருவதாக அமைய பாலகன் இயேசுவிடம் பிரார்த்திக்கின்றோம்.

இயேசுவின் கட்டளைகளையும், போதனைகளையும் ஏற்றுக்கொண்டு அமைதியான வழியில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வில் எல்லோருடைய அன்பையும், ஆதரவையும் பெற்று வாழ வேண்டும்.

## காட்டு யானையுடன்... (3ஆம் பக்க தொடர்ச்சி)

மோதி விபத்திற்குள்ளாகியுள்தாக இபலோகம பொலிஸார் தெரிவித்தனர். கெக்கிராவயில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த பஸ் நேற்று (24) காலை 05.20 மணியளவில் விபத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹாஇலுப்பள்ளம் விதை ஆராய்ச்சி நிலையத்திற்கு முன்னால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விதை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில்இருந்து வளாக வேலியை உடைத்துக்கொண்டு காட்டு பகுதிக்கு செல்வதற்காக பிரதான வீதியை கடப்பதற்கு சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பஸ்ஸின் இடது பக்க முன்பகுதியில் காட்டு யானை மோதியுள்ளதுடன் பஸ் வீதியை விட்டு விலகிச் சென்று மாற மரத்துடன் மோதி சேதத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பஸ்ஸின் சாரதி, நடத்துனர் மற்றும் பயணிகள் இருவர் உட்பட நால்வர் சிறு காயத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களின் நிலை கவலைக்கிடமானதல்ல என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

இப்பகுதியில் தற்போது காட்டு யானைகளின் நடமாட்டம் வெகுவாக அதிகரித்துள்ளதுடன் இவ்வாறான பல விபத்துக்கள் இடம்பெறவிருந்த நிலையில் அவைகள் தடுக்கப்பட்டதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## குளிரூட்டி டிப்பர் வாகனம்...

கொட்டல்தெனிய பாலத்துக்கருகில் வாகனத்தின் டயர் வெடித்ததில் வாகனம் பாலத்துக்குள் குடைசாய்ந்துள்ளது.

சாரதியின் துரித செயலால் எவருக்கும் எவ்வித உயிர் ஆபத்துக்களும் ஏற்படவில்லை.மீட்பு பணிகள் தொடர்கின்றன.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

## கேள்விமனு கோரும் அறிவித்தல்

தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம் 2024ஆம் ஆண்டில் பின்வரும் பொருள்களை வழங்கக்கூடிய வழங்குநர்களிடமிருந்து சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மறுக்களைக் கோருகின்றது.

| Item | Quantity Required | Required Period | Non-Refundable Bid Fee (Rs.) | Refundable Tender Deposit (Rs.) |
|---|---|---|---|---|
| Rapid Drug Test Kit Urine | 200,000 | One year from the date of Bid Bond | 5,000.00 | 1,900,000.00 |
| Blood Glucose Test Strips (Vials) | 1,200,000 | | 5,000.00 | 480,000.00 |
| Blood Grouping Reagents (ABD kit) | A - 2400<br>B - 2400<br>D - 2400 | | 5,000.00 | 192,000.00 |
| Diagnostic Reagents Lancet | 1,200,000 | | 4,000.00 | 168,000.00 |

உத்தேச மனுதாரர்கள் தமக்குத் தேவையான விலைகூறல் ஆவணங்களை 2023 டிசம்பர் 27ஆம் திகதி முதல் 2024 ஜனவரி 12ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.30க்கும் பி.ப. 3.00க்கும் இடையே இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்கியல் பிரிவில் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மீளப்பெற முடியாத கட்டணமாக மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதன் மூலம் இந்த ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முடியும். விலைகூறல் ஆவணங்களை நிரப்பிச் சமர்ப்பிக்கும்போது மீளப்பெறக்கூடிய (4 மாதங்களுக்குச் செல்லுபடியாகும் - 2024 ஜனவரி 18ஆம்) கட்டணம் ஒன்று செலுத்தப்பட வேண்டும். இந்த மீளப்பெறக்கூடிய வைப்பு இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விலைகூறல் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள மனுதாரர்கள் விலைகூறல் ஆவணங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகூறல் முறி ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மனுக்களைப் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் 2ஆம் மாடியிலுள்ள கணக்கியல் பிரிவில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிலையத்திற்குத் தேவையான பொருள்களின் வழங்கல் 2024" என்று குறிப்பிடவும்.

விலைகூறல் மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் 2024 ஜனவரி 17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவடைந்ததும், உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைகூறல் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**
**இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.**
**தொலைபேசி: 0112 814862 - 0112 814 865**

# கொலன்னாவ பிரதேச சபை

## பயன்படுத்தப்படாத வாகனங்களின் ஏல விற்பனை

கொலன்னாவை பிரதேச சபைக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத வாகனங்களை ஏலத்தில் விற்பதற்காக விலைமனுக்களை கோருவது கீழுள்ள திகதிகளில் கொலன்னாவ பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

**விலைமனுக் கோரல்**

I. படிவங்களை வழங்கல் - 2023.12.22ஆம் திகதி தொடக்கம் 2024.01.16ஆம் திகதி வரை பி.ப. 3.00 வரை
II. ஏற்பது – 2024.01.17 ஆம் திகதி மு.ப. 10.15 வரை
III. திறப்பது – 2024.01.17 ஆம் திகதி மு.ப. 10.20

- படிவக் கட்டணம் மற்றும் விலைமனுவுக்கான வைப்பு அட்டவணை கீழ் தரப்பட்டுள்ளது.

| வரிசை இலக்கம் | வாகன இலக்கம் | ரகம் | உற்பத்தி ஆண்டு | விலைமனு பிணை (மீளளிக்கப்படும்) ரூபா | படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா | குறைந்தபட்ச விலைமனு |
|---|---|---|---|---|---|---|
| 01 | SG RC XXXX | STANDARD -TRACTER | 2011 | 7,150.00 | 2,000.00 | 715,000.00 |

- வாகனத்தை பரீட்சித்தல் 2023.12.22 ஆம் திகதி தொடக்கம் 2024.01.16 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் சபை வளவில் மேற்கொள்ள முடியும்.
- விலைமனு தொடர்பில் இறுதி முடிவு கொலன்னாவ பிரதேச சபை வசமானது. மேலதிக விபரங்களை கொலன்னாவ பிரதேச சபையின் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் கேட்டறிந்து கொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம் - 045-2260275**
**செயலாளர் மற்றும் அதிகாரம், பணிகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**கொலன்னாவ பிரதேச சபை,**
**கொலன்னாவ.**

## சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

325

தொழில்துறை
பொது

சாசரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களைப் பராமரிப்பதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினமும் சம்பளம் ஒரு நாள் சம்பளம் ரூ. 2000/ = தேவைப்படும் ஆவணங்கள் கிராம அதிகாரி சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையும். உடனடியாக அழையுங்கள் 0117604526, 077 6315983, 075 2306797, 076 6542999.
083757

# அங்கத்தவர் பெயர் பட்டியலைக் காட்சிப்படுத்தல்

வ/ப பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ. சங்கத்தின் கூட்டுறவுப் பிரதேசங்களில் 2023.12.31ம் திகதி வாக்குரிமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியல் காட்சிப்படுத்தல் 2024.01.11 முதல் 2024.01.25 வரை கீழ்க்காணும் பிரதேசங்களில் மற்றும் சங்க தலைமையகத்தில் கடமை நேரங்களில் காட்சிப்படுத்தப்படும். திருத்தங்கள் இருப்பின் 2024.07.25ம் திகதிக்கு முன்னர் செயலாளர், வ/ப பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ சங்கம், ஹெட்டிபொல என்ற முகவரிக்கு எழுத்துமூலம் அறியத்தரல் வேண்டும்.

இது விநியோகிக்கப்படுவது இல. 1981/12 2016 ஒகஸ்ட் 22ம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் அடங்கியுள்ள விதிமுறைகளின் பிரகாரமாகும் என்பதை தயவுடன் கவனிக்கவும்.

| பிரதேச இலக்கம் | பிரதேச அலுவலக இலக்கம் | அங்கத்தவர் பெயர் பட்டியல் காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|
| 01 | பன்டுவஸ்நுவர | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 02 | ஹெட்டிபொல | ஹெட்டிபொல பிரதேச அலுவலகம் |
| 03 | குரு / கடவலகெதர | நுகவெல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 04 | பண்டார கொஸ்வத்த | பண்டார கொஸ்வத்த பிரதேச அலுவலகம் |
| 05 | மிதியால | பண்டார கொஸ்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 06 | திவுல்வெவ | திவுல்வெவ பிரதேச அலுவலகம் |
| 07 | மதுள்ள | மதுள்ள மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 08 | பெகேவ | ஹெட்டிபொல பிரதேச அலுவலகம் |
| 10 | மடஇன | மடஇன பிரதேச அலுவலகம் |
| 11 | அக்குரனை | அக்குரனை பிரதேச அலுவலகம் |
| 12 | மங்குலாகம மெதகம | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 13 | மண்டபொல | மண்டபொல பிரதேச அலுவலகம் |
| 14 | ரம்பேவ | மதுள்ள மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 15 | மொரகனே | ஹிந்தரபொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 16 | கநோகம | கநோகம பிரதேச அலுவலகம் |
| 17 | திஸ்ஸவ | திஸ்ஸவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 18 | துனுபொத்த | துனுபொத்த பிரதேச அலுவலகம் |
| 19 | மாவிஹேன | கல்லெஹவிட்டிய மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 20 | ஹித்தரபொல | ஹித்தரபொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 21 | தெமட்டவ | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 22 | கிரிமெட்டியாவ | கிரிமெட்டியாவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 23 | ஹங்வெல்ல | ஹங்வெல்ல பிரதேச அலுவலகம் |
| 24 | விஜய உதாகம | விஜய உதாகம மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 25 | கல்லெஹ பிட்டிய | கல்லெஹ பிட்டிய மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 26 | அடுக்கனே | கிரிமெட்டியாவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 27 | கந்தெ மெதகம | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 28 | ரத்மல்ல | துனுபொத்த பிரதேச அலுவலகம் |
| 32 | மூணமல்தெனிய | மூணமல்தெனிய கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 33 | மடிகே மிதியால | பண்டார கொஸ்வத்த பிரதேச அலுவலகம் |
| 34 | மொரகொல்ல | பண்டுவஸ்நுவர கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 40 | மங்குலாகம | மங்குலாகம பிரதேச அலுவலகம் |
| 41 | கொமுகொமுவ | கொமுகொமுவ பிரதேச அலுவலகம் |
| 42 | எபலதெனிய | கொமுகொமுவ பிரதேச அலுவலகம் |
| 43 | குளி / கடவலகெதர | கொமுகொமுவ பிரதேச அலுவலகம் |
| 44 | நிந்தவெல | நிந்தவெல பிரதேச அலுவலகம் |
| 45 | மல்வானேகெதர | மல்வானேகெதர மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 46 | கம்புராபொல | மூணமல்தெனிய கோப்சிட்டி விற்பனை நிலையம |
| 47 | போதிமுல்ல | போதிமுல்ல பிரதேச அலுவலகம் |
| 49 | பரம்பொல | பரம்பொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 50 | தஹனெக்கெதர | மூணமல்தெனிய கோப்சிட்டி விற்பனை நிலையம |
| 51 | வீதியாவல | மூணமல்தெனிய கோப்சிட்டி விற்பனை நிலையம |
| 52 | இஹல பிஹிம்பிய | பரம்பொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம |
| 53 | பண்டார தம்பிட்டிய | பரம்பொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம |
| 54 | பஹல பிஹிம்பிய | பரம்பொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம |
| 55 | கரதவ | அக்குரணை பிரதேச அலுவலகம் |
| 56 | உடகம | பரம்பொல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம |
| 57 | கட்டகமுவ | பண்டார கொஸ்வத்த பிரதேச அலுவலகம் |
| 58 | குருந்துகும்புர | ஹெட்டிபொல பிரதேச அலுவலகம் |
| 59 | கோன்வெவ | மண்டபொல பிரதேச அலுவலகம் |
| 60 | கஹட்டவில | தோதெல்ல விவசாய விற்பனை நிலையம் |
| 61 | தொரபாவில | நுகவெல மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 62 | தெமலதொர | திஸ்ஸவ மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |

**செயலாளர்,**
**வ/ப - பண்டுவஸ்நுவர புதிய ப.நோ.கூ. சங்கம்**
**(பணிப்பாளர் சபையின் கட்டளைப் படி)**

## கொள்முதலுக்கான கோரல்

புத்தசாசன, மத, மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

# மத்திய கலாச்சார நிதியம்

மத்திய கலாச்சார நிதியத்தினால் பின்வரும் நடவடிக்கைகளுக்காக ஆர்வமுள்ள நிறுவனங்களிடமிருந்து கொள்முதலுக்கான கேள்விகோரல் கோரப்படுகின்றன.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல. | மனு இலக்கம் | விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.மி. | தேவையான தகுதிகள் | விண்ணப்ப கட்டணம் ரூ. | மனுப்பத்திர மதிப்பீடு மற்றும் செல்லுபடியாகும் காலம் ரூ. | மனு ஆவணங்கள் வெளியிடுதல் | முன்மனு கலந்துரையாடல் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி / நேரம் மற்றும் இடம் |
| 1 | CCF/HO/works 16-i 2023 | சீகிரியா குளிர் அரண்மனையை பார்வையிடுவதற்காக முன்மொழியப்பட்ட பாலமொன்றின் கட்டுமானம் | 4.5 (VAT அல்லாத) | CIDA C8 மற்றும் C7 கட்டிட கட்டுமானம் | ரூ.3,000.00 | ரூ.50,000.00 105 நாட்கள் | 2023.12.22 2024.01.15 | 2024.01.05 மு.ப.10.30 சீகிரியா செயற்திட்டம் தொ.பே.066-2286945 | 2024.01.16 பி.ப.2.00 தலைமை அலுவலகம் கொழும்பு 07 |
| 2 | CCF/HO/works 08-2023 | ஜேதவன ஸ்தூபியின் நாற்புறம் மற்றும் கொத்கெரல்ல நடுவில் அமைக்கப்பட்டுள்ள Bituminous நீர்ப்புகா நிறப்பூச்சு மறுசீரமைப்பு | 15 (VAT அல்லாத) | CIDA C6 அல்லது C5 (SP- C) Water Proofing | ரூ.4,000.00 | ரூ.150,000.00 105 நாட்கள் | 2023.12.22 2024.01.22 | 2024.01.12 மு.ப.10.00 ஜேதவன செயற்திட்டம் தொ.பே.025-2224718 | 2024.01.23 பி.ப.2.00 தலைமை அலுவலகம் கொழும்பு 07 |
| 3 | CCF/HO/ works 13-2023 | காலி அருங்காட்சியகத்தில் உள்ள தரையின் சிதைந்த பகுதிகளை பாதுகாத்தல் | 3.4 | CIDA C8 மற்றும் C7 | ரூ.3,000.00 | ரூ.30,000.00 105 நாட்கள் | 2023.12.22 2024.01.15 | 2024.01.09 மு.ப.10.00 காலி செயற்திட்டம் தொ.பே.091-2227640 | 2024.01.16 பி.ப.2.00 தலைமை அலுவலகம் கொழும்பு 07 |
| 4 | CCF/HO/ works 04-2023 | சிகிரியா அலங்கார சுவர் மற்றும் கலைக் குகையில் - CCTV கெமரா அமைப்பொன்றை நிறுவுதல். | 3 | EM 03 அல்லது அதற்கு மேல் | ரூ.3,000.00 | ரூ.30,000.00 91 நாட்கள் | 2023.12.22 2024.01.15 | 2024.01.05 மு.ப.10.00 சீகிரியா செயற்திட்டம் தொ.பே.066-2286945 | 2024.01.16 பி.ப.2.00 தலைமை அலுவலகம் கொழும்பு 07 |
| 5 | CCF/HO/ works 05-2023 | CCTV கெமரா அமைப்பொன்றை நிறுவுதல். இல.212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 இல், | 2 | ICTAD EM 4 அல்லது அதற்கு மேல் | ரூ.3,000.00 | ரூ.20,000.00 91 நாட்கள் | 2023.12.22 2024.01.15 | 2024.01.10 மு.ப.10.00 தலைமை காரியாலயம் கொழும்பு 07 தொ.பே.011-2552671 | 2024.01.16 பி.ப.2.00 தலைமை அலுவலகம் கொழும்பு 07 |
| 6 | CCF/HO/ works 18-2023 | The Cultural Triangle of Sri lanka Book - (English) புத்தகத்தின் 2,500 பிரதிகளை மறுபதிப்புச் செய்தல். | 4 | வியாபார பதிவுமற்றும் அச்சுப் பதிப்பில் 05 வருட சேவை அனுபவம் | ரூ. 3,000.00 | ரூ.40,000.00 118 நாட்கள் | 2023.12.22 2024.01.15 | 2024.01.10 மு.ப.10.30 தலைமை காரியாலயம் கொழும்பு 07 தொ.பே.011-2552671 | 2024.01.16 பி.ப.2.00 தலைமை அலுவலகம் கொழும்பு 07 |
| 7 | CCF/HO/ works 28-2023 | சிகிரியா செயங்திட்டத்தில் உடபுற பாதை நிர்வாக நடவடிக்கைகளுக்காக 1672 கியூப் சரளை மண் துகள்களை வழங்குதல் | 12 | வியாபார பதிவு மற்றும் சேவை அனுபவம் | ரூ.3,000.00 | ரூ.120,000.00 118 நாட்கள் | 2023.12.22 2024.01.08 | 2024.01.05 மு.ப.10.30 சீகிரியா செயற்திட்டம் தொ.பே.066-2286945 | 2024.01.09 பி.ப.2.00 தலைமை அலுவலகம் கொழும்பு 07 |

1. மனு ஆவணத்தினை பரிசீலனை செய்தல் மற்றும் மேலே 01 முதல் 07 வரை பணம் செலுத்திய அனைத்து பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை சரப் பிரிவு மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி வார நாட்களில் **மு.ப. 9.00** மணி முதல் **பி.ப.3.00** மணி வரை இல-212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 மத்திய கலாச்சார நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.
2. குறித்த மனு உத்தரவாதத்தினை தலைமை காரியாலயம் / செயற்திட்ட அலுவலகங்களில் உள்ள சரப்பிடம் பணமாக செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மூலம் அல்லது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின்படி பெறப்பட்ட மனு உத்தரவாத கேள்விமனு விலைகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. அதன்படி பூரணப்படுத்தப்பட்ட கேள்விமனுக்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள திகதியில் **பி.ப.2.00** மணிக்கு முன்னர் கிடைக்குமாறு **தலைவர், கொள்முதல் குழு, மத்திய கலாசார நிதியம், 212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07** என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது முத்திரையிடப்பட்ட மனுப்பத்திரத்தினை நேரடியாக அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடலாம்.
4. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி **பி.ப.2.00** மணிக்கு பின்னர் மத்திய கலாசார நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். மேலும் அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது உரிமம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்.
5. முழுமையற்ற மனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் மேலும் கொள்முதல் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதி தீர்மானமாக கருதப்படும்.
6. இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள தொலைபேசி இல. **011-2552671** மற்றும் எமது அதிகாரபூர்வ இணையத்தளத்தினை பார்வையிடவும். (**www.ccf.gov.lk**)

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய கலாச்சார நிதியம்.**

SELACINE


Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343




# சிவனொளிபாத மலையில் மின்மாற்றிகள் புதிதாக பொருத்தும் பணி ஆரம்பம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.**





சக்தி வாய்ந்த மின்மாற்றிகள் பொருத்தும் பணியில் மின்சார நிலைய அதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மின்சாரம் சிவனொளிபாத மலைக்கு வழங்கும் மின் இணைப்பு அம்பலம் பகுதியில் நிறுவப்பட்டுள்ள 25 KVA மின் மாற்றிக்கு பதிலாக இரண்டு 160 KVA மின்மாற்றிகள் பொருத்தப்படவுள்ளதாக மத்திய மாகாண மின் நிர்மாணப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். ஊசி மலை பகுதியில் நிறுவப்பட்டுள்ள இரண்டு KDA 25 மின் மாற்றிகள் உள்ளதாகவும் மின்சார சபையின் பொறியியலாளர் தம்மிக்க பண்டார தெரிவித்தார்.

இந்த புதிய அதி சக்தி வாய்ந்த மின்மாற்றி அமைப்பின் ஊடாக 50 வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சியான மற்றும் தரமான மின்சாரத்தை வழங்கும் திறனை சிவனொளிபாத மலைக்கு பெற்று கொடுத்துள்ளதாக நிர்மாண பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

"தர்ம சுகந்தய மனுசத் அறக் கட்டளை" யைச்சேர்ந்த திரு. பிய திஸ்ஸ விக்கிரமரத்ன உள்ளிட்ட குழுவினர் குழாய்களை பதித்து, மின்சார நீரேற்று நிலையங்களுக்கு நீர் விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆண்டு (2023/2024) சிவனொளி பாதமலை பருவகாலம் உந்துவப் புன் பௌர்ணமி நாளில் அதாவது நாளை (26) முதல் தொடங்குகிறது. யாத்திரை காலம் தொடங்கும் முன், பக்தர்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், தர்ம சுகந் தயா மனுசத் அறக்கட்டளை இந்த நல்ல பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய மாகாண ஆளுநர் பதவியேற்று 04 வருடம் பூர்த்தி







மத்திய மாகாண ஆளுநராக லலித் யூ கமகே பதவியேற்று 4 வருட பூர்த்தியை முன்னிட்டு மாத்தளை மாநகர சபையினால் ஏற்பாடு செய்த வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மாத்தளை மாநகர சபை மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரண பொதி ஒன்றை வழங்குவதையும் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்டகொட அங்கு உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படம் மாத்தளை சுழற்சி நிருபர்)

# மலையக இந்துகுருமார் ஒன்றிய ஏற்பாட்டில் அறநெறி எழுச்சி விழா



**ஹட்டன் விசேட நிருபர்.**

மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் 18 வருட பூர்த்தியினை முன்னிட்டு அறநெறி எழுச்சி விழாவும் 'மலையகம் 200' மாபெரும் விருது வழங்கும் விழா கடந்த 22ஆம் திகதி கொட்டகலை ரிசிகசி கலாசர மண்டபத்தில் ஒன்றியத்தின் ஸ்தாபகரும் பொதுச்செயலாளருமான சிவஸ்ரீ சுரேஸ்வர சர்மா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வினை முன்னிட்டு கொட்டகலை புகையிரத கடவைக்கு அருகாமையில் அறநெறி மாணவர்கள் மற்றும் சமய தலைவர்கள் அரசியல் சமூக பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட ஊர்வலம் மிக சிறப்பாக நடைபெற்றது. அதில் அறநெறி மாணவர்களின் பாரம்பரிய இசையான தப்பு கோலாட்டம், கரகாட்டம், காவடி உள்ளிடட பல கலை கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

பாரத தேசத்தின் தமிழ் நாடு திருகைலாய ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் சிவநெறி பிரச்சாரகர் திருமறைக் கலாநிதி ஸ்ரீலஸ்ரீ சிவகர தேசிக சுவாமிகளின் ஆசி உரையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், கனடா வோல்ட் எக்ஸன் பவுன்டேசன் ஸ்தாபகர் சுபாஸ் சுந்தரராஜ் மத குரமார்கள் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அதிக ஞாபக சக்தி, பொது அறிவின் மூலம் உலக சாதனை படைத்த சிறுவன்

**(பலாங்கொடை தினகரன், இரத்தினபுரி சுழற்சி நிருபர்கள்)**




அதிக ஞாபகம் சக்தி உட்பட தனது பொது அறிவின் மூலம் சோழன் உலக சாதனை படைத்துள்ளார். பலாங்கொடை இ/சீ.சீ தமிழ் மகா வித்தி யாலயத்தைச் சேர்ந்த பீ. முரளீதரன் என்ற மாற்றுத்திறனாளி மாணவன்.

ஆட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 9 வயதான இம்மாற்றுத்திறனாளி சிறுவனே தனது ஆசிரியரின் சிறப்பான வழிகாட்டல் மூலம் இச்சாதனையை படைத்துள்ளார்.

தன் அதிக ஞாபகசக்தி மூலம் உலக நாடுகளின் தலை நகரங்களை அவற்றின் கொடிகளின் துணையோடு அடையாளம் காட்டுதல் உலக நாடுகள் ஒவ்வொன்றினதும் நாணயங்கள் பேசப்படுகின்ற மொழிகள் நாடுகளின் தலைவர்கள் பற்றியும் மற்றும் பொது அறிவு விளையாட்டுத்துறை சார்ந்த பொது அறிவுக் கேள்விகளுக்கான பதில் களை வழங்குவதல் போன்ற பல திறமைகளைத் தன்னகத்தை கொண்ட இம்மாணவன் சோளன் உலக சாதனை பரிசோதனைக் குழுவிடம் ஒப்புவித்துக்காட்டி உலக சாதனைக் குழுவினரினதும் அனைவரினதும் பாராட்டினைப்பெற்றார்.

பாடசாலைக்கு வருகை தந்த இக்குழுவினர் இச்சிறுவனின் திறமைகளை முறையாக பரிசோதனை செய்த சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் அவற்றை உறுதி செய்து அவருக்கு சோழன் உலக சாதனைக்கான சான்றிதழை வழங்கியது.

இந்த நிகழ்வில் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெருமாள் நீலமேகம் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றி இச்சிறுவனின் உலக சாதனையை உறுதி செய்தனர்.

'யுக்திய' பொலிஸ் நடவடிக்கை;

# பலாங்கொடையில் 52 பேர் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது ஹெரோயின் ஐஸ் மற்றும் கேரள கஞ்சா வைத்திருந்த மற்றும் சட்ட விரோத மதுபானம் தயாரித்தல் போன்ற குற்றச்சாட்டுகளில் ஈடுபட்ட 52 பேர் கைது செய்யப்பட்டுளளனர்.

பலாங்கொடை நகரம் புறநகர்ப் பிரதேசங்கள் மற்றும் கிராமப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விஷேட சுற்றிவளைப்புக்களின் போது இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பலாங்கொடை பிரதான பஸ் நிலையம் மற்றும் பிரதேசங்களில் 9 பேர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களிடம் இருந்து ஐஸ் 71 கிராம் ஹெரோயின் 3 கிராம் கேரள கஞ்சா 550 கிராம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸ் மா அதிபரின் யுக்திய செயற்பாடுகளுக்கிணங்க இத்தேடுதல்கள் மேற் கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


# பாணந்துறை, தொட்டவத்தையில் இன்று முப்பெரும் விழா நிகழ்வு

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

பாணந்துறை தொட்டவத்தை ஆசிரியர்கள் குழுமத்தின் அமைப்பான தொட்டவத்தை கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சை உள்ளிட்ட கல்விக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகம் தெரிவான கல்வித்துறை சாதனையாளர்கள் பட்டம் பெற்றவர்களான பிராந்தியத்தைச் சேர்ந்த 465 பேர் இன்று (25) திங்கட்கிழமை பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். பாணந்துறை வேறவத்தை மகீஸா மஹால் மண்டபத்தில் இன்று காலை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அல் பஹ்றியா தேசிய பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.ரிஸான் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

தொழில்நுட்ப கல்வித் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.கே. முஹைஸ் மற்றும் களுத் துறை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம். இல்யாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர். கொழும்பு டீ சொய்சா மகளிர் வைத்தியசாலை டாக்டர் இஸ்ஸத் முஹைஸ் விசேட அதிதியாக கலந்துகொண்டு சிறப்பிக் கவுள்ளார்.

# 111 வது ஆரிஹாமம் கந்தூரி பெருவிழா






அகில இலங்கை ஸூபிஸ ஆன்மீகப் பேரவையின் ஏற்பாட்டில் குருநாகல் மாவட்டம், தும்மலசூரிய, யகம்வெல ஆரிஹாமம் எனும் ஊரில் மறைந்து வாழும் மகான் இறைநேசச்செல்வர் ஸையதினா ஷேய்ஹ் இஸ்மாயீல் ஆரிபுபில்லாஹ் வலியுல்லாஹ் நாயகம் அவர்களின் பெயரில் 111 வது வருட கந்தூரி பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

அகில இலங்கை ஸூபிஸ ஆன்மீகப் பேரவையின் ஆயுட்காலத் தலைவர் தேசமான்ய தேசபந்து கலாநிதி அல்ஹாபிழ் DR. அப்துல்லாஹ் நூரி, ஸூபி, காதிரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கந்தூரி பெரு விழாவிற்கு விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்த பாராளுமன்ற உறுப்பினர் அஸ்ஸெய்யித் அலி ஸாஹிர் மௌலானா, அஸ்ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா, வழக்கறிஞர் அஸ்ஸெய்யித் மர்ஸூம் மௌலானா, அஸ்ஸெய்யித் ஹனீப் மௌலானா மற்றும் அஸ்ஸெய்யித் இர்பான் மௌலானா ஆகியோர் கலந்து சிறப்பித்து நல்ல பல தகவல்களை எடுத்துக் கூறினர்.

மேலும் சிறப்பு பயான் நிகழ்ச்சிகளுக்காக பிரபல மார்க்க சொற்பொழிவாளர்களான அல் ஆலிம் அல் ஹாபிழ் இஹ்ஸான் இக்பால் காதிரி, அல் ஆலிம் ஸபா முஹம்மது நஜாஹி, அல் ஆலிம் அல் ஹாபிழ் ஸிராஜுத்தீன் நஜாஹி, அல் ஆலிம் மபாஸ் நூழாரி, விரிவுரையாளர் அஹமட் இன்திகாப் ஸூபர், பேராசிரியர் அல்ஹாஜ் ஃபைஸல் ஹஸன் காரி ஆகியோர் கலந்து சிறப்பித்து தமிழிலும் சிங்களத்திலும் மக்களின் சந்தேகங்களுக்கான பல விளக்கங்களை இனிய முறையில் உபதேசம் செய்தனர்.

சிறப்பு அதிதியாக ஜனாதிபதி சட்ட ஆலோசகரும் அகில இலங்கை ஸூபிஸ ஆன்மீகப் பேரவையின் வழக்கறிஞருமான சம்பத் தென்னகோன் உரையாற்றினார். மேலும் சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்த முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர உரையாற்றும்போது; இந்நாட்டு பாரம்பரிய ஸூபி முஸ்லிம்களுக்கு 1400 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறு இருப்பதாகவும் ஸூபி மக்களே இந்நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நிலை நாட்ட கூடியவர்கள் என்று உணர்ச்சி பூர்வமாக உரையாற்றினார். மேற்படி நிகழ்வு இரண்டு நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பேருவளை நல்லஹேன அரசாங்க வைத்தியசாலையின் பாவனைக்காக ஒரு தொகுதி மருத்துவ உபகரணமும் 'ஒக்சிஜன்' நிரப்பிய சிலிண்டரையும் பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி வைத்தியசாலை பொறுப்பாளரிடம் அண்மையில் கையளித்தபோது எடுத்த படம்.

# மூளைக்காய்ச்சலால் கைதி உயிரிழப்பு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

மாத்தறை சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கைதியொருவர் உயிரிழந்தார். மேலும் எட்டு கைதிகள் பாதிக் கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை பேச்சாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்தார்.

உயிரிழந்த கைதி மூளைக்காய்ச்சல் காரணமாக மாத்தறை மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். கொலைக் குற்றச்சாட்டின் கீழ் கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி கைது செய்யப் பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த கைதியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய சிறைச்சாலையின்

செயற்பாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். கைதிகளை பார்வையிட வருவோர் சுகாதார பரிந்துறைகளுக்கு அமைய பார்வையிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.**

தலவாக்கலை பிரதேச செயலகம் மற்றும் தலவாக்கலை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் தலவாக்கலை பாரதி இளைஞர் கழகத்துடன் இணைந்து மாத்தறை மாவட்ட இளைஞர் சம்மேளனம் பாடசாலையின் 50 மாணவர்களுக்கான தலா ரூ.4000 பெறுமதியான கற்றல் உபகரணங்களை அன்பளிப்பு செய்ததோடு மாத்திரமல்லாது பாடசாலையில் உள்ள 3 வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசி (Painting) வேலைகளையும் செய்து கொடுத்துள்ளன.

ஐ.நா சபையின் மனித உரிமை அமைப்பின் யாழ். மாவட்ட பிரதித்தவிசாளர்

# விஸ்வ பிரம்மஸ்ரீ தேசமானிய அ. கோபாலகிருஸ்ணன் சுவாமியின் சமூகப்பணிகள் ஒரு மீள்பார்வை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பிரதித் தவிசாளர் விஸ்வ பி ர ம் மஸ்ரீ தேசமானிய அ. கோபாலகிருஸ்ணன் சுவாமி சமய குருத்து சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்றார்.

இவர் மிகவும் பின்தங்கிய வறிய மக்களுடைய எண்ண உணர்வுகளையும் மற்றவர்களுடைய அவலங்களையும் அறிந்து அரும்பணி ஆற்றிவருகின்றவர். இத்தகைய சமூக நலச் சேவையின் காரணமாக இந்தியாவின் குளோபல் சமாதான பல்கலைக் கழகத்தின் சமூக சேவைக்கான கலாநிதி பட்டம், சர்வதேச மனித உரிமை அமைப்பின் இந்திய அமெரிக்கன் கல்லூரியின் விருது, குளோபல் பல்கலைக்கழகத்தின் விருது, 2023 இல் சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற டொப் 100 விருது என். ஜே. எப் விருது மனித உரிமை சமாதான அமைப்பின் விருது, இசைவானம் இசை மன்றம் சர்வதேச சிறுவர் பணியகம் ஆகிய அமைப்பினால் நடத்தப்பட்ட தலைமைத்துவ ஆளுமைகளுக்கான விருது, குளோபல் ஆசியா அமைப்பின் தேசமானிய விருது, குளோபல் சமாதான பல்கலைக்கழகத்தின் விருது, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தினால் கலைத்துறையில் பங்காற்றியமைக்காக கண்டி கெப்பட்டிபொல ஞாபகார்த்த மண்டபத்தில் தேசிய கலாவிபூசணம் விருது வழங்கி வைக்கப்பட்டது. அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்ற இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கி செவ்வி.

**உங்கள் ஆரம்ப வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?**

நான் 1974 .06. 10 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் போரைதீவு முனைத்தீவு என்ற கிராமத்தில் பிறந்தேன். அம்மா பெயர் அருளம்மா, அப்பாபெயர் ஆறுமுகம். விஸ்வபிரம்மஸ்ரீ குலத்தைச் சேர்ந்தவன். சிறு வயதில் தந்தை இறந்து விட்டார்.

அப்பொழுது அம்மா அப்பம் சுட்டுத் தான் எங்களை வளர்த்தார். அம்மா அப்பம் சுட்டுத் தருவார். நான் அதனை எடுத்துக் கொண்டு போய் விற்பேன். அது ஒரு மிகவும் கடிமான வாழ்க்கை முறையாகும். எனக்கு அக்கா ஒன்று அண்ணன் ஒன்று கடைசியா நான். ஆக மூத்த அண்ணனும் 1978 இல் சூறாவளிக் காலத்தில் இறந்து விட்டார். அக்கா தான் என்னை வளர்த்தார். அப்பொழுது நாங்கள் அணியும் காற்சட்டையின் பின் பக்கம் ஒட்டையாக இருக்கும். அப்படியே நான் பாடசாலைக்குச் செல்வேன். இப்படியான வறுமையான கால கட்டத்தில் தான் நாங்கள் படித்தோம்.

1981 இல் முதலாம் வகுப்பு முனைத்தீவு தமிழ் வித்தியாலயத்தில் கற்றேன். அதன் பின்பு 1982 இல் யாழ்ப்பாணம் வந்து இரண்டாம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன்.

தொழில் என்பது குலத்தோடு சேர்ந்து செய்வதாகும். அப்பாவின் குலப் பின்னணியில் தொழிலை மதித்து சிறு பராய முதல் தங்க நகையுடன் சம்மந்தப்பட்ட சிற்பங்கள், செய்ய ஆரம்பித்தேன். சிற்பக் கலையிலும் ஐந்து விதமான பிரிவுகள் உள்ளன. அதில் சுவாமிக்கு தங்கத்தில் நகைகள் செய்யும் விடயங்களையே நான் செய்கின்றேன். இடைக்கிடை ஆபரண விடயங்கள் செய்து வருகின்றேன். தற்போது பூசாரி தொழிலும் செய்து கொண்டு வருகின்றேன். ஐயப்பர்சுவாமி பக்தர்களுக்கான குருசாமி தொழிலும் செய்து வருகின்றேன். 1990 இல் நான் முதன் முதலில் ஆபரணத் தொழிலை கற்றுக் கொள்வதற்குச் சிலாபம் சென்றேன். அங்கு பஸார் வீதியில் என் அண்ணன் மாணிக்கவாசகம் ஆபரணப் பட்டறை போட்டு இருந்தார். அவரிடம்தான் ஆபரணத் தொழிலை முழுமையாகக் கற்றுக் கொண்டேன். அதன் பின்பு 1995 இல் யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் வீதியில் தனியாக ஆபரணத் தொழில் செய்ய ஆரம்பித்தேன்.

பருத்தித்துறை கற்கோளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த குடும்ப நல உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி வருகின்ற காயத்திரி என்ற பெண்ணை திருமணம் செய்தேன். இரு பிள்ளைகள் உள்ளனர். மூத்த மகள் பெயர் சரண்யா. வயது 16. பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் படிக்கின்றார். அவர் இம்முறை க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்.

இரண்டாவது பிள்ளை மகள்தான் அவர் பெயர் கிருஸ்ணயா, கற்கோளம் மேமிதக்கா பாடசாலையில் இரண்டாம் வகுப்பில் கல்வி கற்கின்றார். தற்போது ஆபரணம் செய்வதற்கான ஒரு பட்டறை ஒன்றை வைத்துக் கொண்டு செய்து வருகின்றேன்.

விஸ்வ பிரம்மஸ்ரீ படைத்தல் குலம் என்ற காரணத்தினால் கோயில் சமய கிரியைகளுக்குரிய விடயங்களை படைத்து ஐயாக்களிடம் ஒப்படைத்து வருகின்றோம். கண் திறக்கின்ற வேலைகளை நான் செய்வேன். இது ஒரு கஷ்டமான வேலையாகும். இக்கண் பிழையாகத் திறந்தால் குடும்பத்திற்கே பாதகமாக அமையும். இது மிகக் கடினமான வேலை.

**உங்கள் சமூக சேவை பற்றி...**

என்னைப் பொறுத்தவரையிலும் யார் சரி துன்பப்படுபவர்களைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற இளகிய மனம் தானாகவே இருந்து வருகிறது. எந்த மதம் இனம் என்று இல்லாமல் கையில் உள்ளதைக் கொண்டு உதவி செய்து வருகின்றேன். என்னால் செய்ய முடியாமை போனாலும் வேறு யாரிடத்திலாவது வாங்கி கொடுத்துதவி செய்வேன். என்னுடைய நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்களிடம் கேட்டால் இல்லை என்று சொல்ல மாட்டார்கள். தருவார்கள். அவற்றைக் கொண்டு உதவி செய்வேன்.

காரணம் நானும் சிறு வயதில் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையினை அனுபவித்துள்ளேன். எனவே எங்கள் குடும்பமும் மிகவும் பின்தங்கிய குடும்பம். அந்த வகையில் யாருக்காவது உள்ளதைக் கொண்டு உதவி செய்ய வேண்டும் என்ற நெருடல் எனக்குள் தினமும் இருந்து வருகிறது. நான் ஆரம்பத்தில் கஷ்டத்தை எதிர் நோக்கியது போன்று வேறு எந்தப் பிள்ளைகளும் வரக் கூடாது என்று சிந்தித்து ஏதாவது கையில் உள்ளதைக் கொண்டு மனிதாபிமான உதவிகள் செய்து கொண்டு வந்தேன்.

இதனை மேலும் விரிவுபடுத்தி செய்ய வேண்டும் என்பதற்காக பருத்தித் துறையில் இசைவாணம் என்ற இசைக்குழுவொன்றை ஆரம்பித்து இசைக்கச்சேரிகள் நடத்தி அதன் மூலம் கிடைக்கும் நிதி உதவிகளை சேகரித்து பல மனிதாபிமான உதவிகள் செய்துள்ளோம். வெளிநாட்டு பாடகர்களை வரவழைத்து இசைக் கச்சேரிகள் நடத்துதல், உள்ளூர் கலைஞர்கள் எங்கள் குழுவிலும் இருக்கின்றார்கள். அவர்களும் நன்கு பாடக் கூடியவர்கள் பல்வேறு நிகழ்வுகளுக்கு எங்களை அழைப்பார்கள். அவைகளுக்குச் சென்று கச்சேரி நடத்துவோம். அதில் நான் ஒரு அறிவிப்பாளராகவும் பாடகராகவும் இருந்து வருகின்றேன். இந்த இசைவாணம் என்ற குழுவின் தலைவராகவும் நான்தான் இருக்கின்றேன். இந்த இசைக்குழுவின் மூலம் கஷ்டப்பட்ட மக்களுக்கு நிறைய உதவிகள் செய்துள்ளோம்.

விசேடமாக மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தல் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்தல், கற்றல் உபகரணங்கள் வழங்குதல், சில பிள்ளைகளுக்கு மாதாந்தம் நிதி உதவிகள் வழங்குதல் போன்ற பல்வேறு பட்ட உதவிகள் செய்து வருகின்றோம்.

என்னுடைய நண்பர்கள் சமூகப் பணிகளுக்கு மிக நெருக்கமாக இருந்து உதவி செய்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஒருவேளை மரவெள்ளிக் கிழங்கை மட்டும் சாப்பிட்டு விட்டு பேசாமல் இருப்பவர்கள் உள்ளார்கள். நாங்கள் செய்யும் இப்படியான வேலைகளைப் பார்த்து விட்டு சிலர் கேட்பார்கள். நாங்கள் மச்சம் பரிமாறுவது இல்லை. எனினும் நாங்கள் வேறு ஆட்களை வைத்து வாங்கி சமைத்துக் கொடுக்கின்றோம். இந்த மாதரி சாப்பாடுகள் கொடுப்பதற்கு ஒரு நேரத்திற்கு 75,000 ரூபா மட்டும் செலவு போகும். சுமார் 100 அல்லது 150 பேர் என்று சமைத்துக் கொண்டு போய் கொடுப்போம். இப்படி எடுத்துச் சென்று கொடுத்தால் அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைவார்கள்.

கர்ப்பிணித் தாய்மார்கள் பிரசவத்திற்குரிய பயன்படுத்தக் கூடிய பொருட்கள் இல்லாமல் கஷ்டப்படுவோர்கள் உள்ளனர். ஏனென்றால் திருமணம் முடித்து விட்டு மனைவிமார்களை விட்டுப்போட்டு சிலர் சென்று விடுவார்கள் . அவர்கள் மிகவும் கஷ்டத்தில் இருப்பார்கள். இது தொடர்பில் மனைவி வந்து என்னிடம் கூறுவார். அவர்களை இனங்கண்டு அதற்குத் தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து வருகின்றோம். இதன் பெறுமதி சுமார் 25,000 ரூபாவாகும். பெட்சீட், தலையணை பவுடர் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து சகல வகைகளும் வழங்கி வருகின்றோம்.

எங்களுக்கு கிடைக்கின்ற சம்பளத்தில் அவர்களுக்கும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் செய்து வருகின்றோம்.

வங்கிக்கணக்கில் பணம் கை இருப்பில் இல்லை. ஆனால் சேவைகள் நடந்து கொண்டு போகிறது. அது கடவுள் புண்ணியத்தில் அடியார்கள் தருவார்கள்.

ஒரு பிச்சைக்காரனைக் கண்டாலும் அவருக்கு போய் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. காரணம் நான் சிறுவயதில் அனுபவித்த துயரம்தான் யாரைக் கண்டாலும் உதவ வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தொடர்ந்து இருந்து வருகின்றன.

UNHR அமைப்பின் ஊடாக நிறைய உதவிகள் மக்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளேன். பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு உதவிகள் செய்துள்ளேன். குடிசைகள் கட்டுவதற்கு உதவிகள் செய்தேன். யாழ்ப்பாணம் ஏ 9 வீதியில் அமைந்துள்ள பூம்புகார் என்ற கிராமத்தில் முன்பள்ளிப் பாடசாலை ஒன்றை பொலிஸாரின் நிதி உதவியுடன் நிர்மாணித்துக் கொடுத்துள்ளேன். போதை வஸ்துப் பாவனைக்கு உட்பட்டவர்களுக்கு மாவட்ட செயலகத்தின் ஊடாக புனர் வாழ்வுப் பணிகளை மேற்கொள்கின்றேன். இப்படி நிறையச் சொல்லாம். கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, உள்ளிட்ட பல மனிதாபிமான உதவிகள் என்னால் இயன்ற வரை தெரிந்தவர்களுடன் தொடர்பு கொண்டு செய்து வருகின்றேன் என்று கூறலாம்.

**நீங்கள் ஆர்வத்துடன் ஈடுகின்ற கலை தொடர்பான விடயங்கள் பற்றி...**

சிந்து நடைக்கூத்துக் கலைகளை மேடைகளில் அரங்கேற்றி வருகின்றேன். அதற்கென குழுவொன்று இருக்கின்றது. எனது மகள் சரண்யா பூமாதேவி பாத்திரம் ஏற்று நடிப்பார். காத்தவராயன் சிந்து நடைக் கூத்து என்றால் மஹாபாரதத்தில் படலங்கள் உள்ளன. அதைப் போன்று சிந்து நடை கூத்திலும் ஒவ்வொரு பிரிவுகளாக இருக்கும். காத்தவராயன் சிந்து நடைக் கூத்தில் மாலைக்கு வாதாடிய காத்தான். ஒரு வரலாற்றைப் பாட்டு மூலமாகச் சொல்வதாகும். கிராமிய நாட்டார் இசை மூலம் நாங்கள் பாடிக் கொண்டு போவோம். இதனை நாங்கள் கோயில் திரு விழாக்களில் செய்வோம். வெளியிடங்களில் நடைபெறும் கோயில் விழாக்களிலும் எங்களைக் கலந்து கொள்ள அழைப்பு விடுப்பார்கள். சிவபெருமான் மாதிரி வேசம் அணிந்து நடித்துக் காட்டுவோம். சிவபெருமான் பாட்டுப் பாடுவது பாட வேண்டும். இதில் 75 விகிதம் பாட்டுத்தான் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் எல்லாக் கிராமங்களிலும் செய்துள்ளோம். மட்டக்களப்பு உள்ளிட்ட ஏனைய பகுதியிலுள்ள கோயில்களுக்கும் சென்று சிந்து நடைக் கூத்துக் கலையினை அரங்கேற்றி வருகின்றோம்.

**நீங்கள் ஐயப்பர் சாமி குலப் பணி புரிவதில் மிகப் பிரபல்யமான ஒருவராக பேசப்படுகின்றீர். அவை பற்றிக் கூறுவீர்களா?**

ஐயப்பன் பக்தர்களுக்கு சாமியாகவும் கடமயாற்றுகின்றேன். இந்தியா கேரளாவுக்கு கடந்த 15 வருடங்களாக சென்று வருகின்றேன். அதற்கு நான் தான் குருசாமியாக இருக்கின்றேன். என்னுடன் கேரளாவுக்கு சாமிமார்களும் வருவார்கள். இதிலும் சேவையினைத் தான் செய்து வருகின்றேன். கோயிலில் உண்டியல் வைக்க மாட்டோம். ஒரு ஐயப்பர் பக்தரிடம் எந்த விதமான பணமும் அறவிட மாட்டோம். குறிப்பாக சமையலுக்குக் கூட பணம் அறவிடமாட்டோம். இதற்கு எங்களிடமுள்ள பணத்தைக் கொண்டும் மற்றைய அடியார் வழங்கும் பணத்தைக் கொண்டும் 48 நாட்கள் ஒரு மண்டலம் செய்வோம். பணம் அறவிடாதமையின் காரணமாக அடியார்கள் இதற்கு உதவி செய்வார்கள். அவர்கள் உருளைக் கிழங்கு மரக்கறி வகைகளை வாங்கி கொண்டு வந்து அன்பளிப்பாகத் தருவார்கள்.

குறிப்பாக போதைவஸ்துகளுக்கு அடிமைப்பட்டவர்கள், பல்வேறு ரீதியிலான பிரச்சினைகளில் இருந்து விடுபடாமல் உள்ளவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றோம். அதன் போது அறவொழுக்கம் தெய்வீக வணக்க வழிபாடுகள் பயிற்சிகள் என்பன மேற்கொள்ளப்படும் மேலும் அவர்கள் கேரளாவுக்கு செல்வதற்கான விமான டிக்கட் வசதிகள் பெற்றுக் கொடுத்து அழைத்துச் செல்வோம்..

நேர்காணல் ஜீவராஜ்






























# கிழக்கின் குரல்



## சிங்கள மொழி பேச்சுப் போட்டியில் சாதனை படைத்த மருதமுனை பாடசாலை மாணவி

*பாலமுனை தினகரன் நிருபர்*



மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலையின் தரம்_8 இல் கல்வி கற்கும் முஹம்மது ஹம்ஸா பாத்திமா அஸ்லின் தேசிய மட்ட இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப்போட்டியில் திறமைச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டிலும் இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப் போட்டியில் சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த இவர், தேசியமட்டப்போட்டியில் கலந்து கொண்டு திறமைச் சான்றிதழ் பெற்றிருப்பது ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

தமிழ் மொழி மூலமான பாடசாலையில் கல்வி கற்று இவர் இவ்வாறான திறமைகளை வெளிக்காட்டியுள்ளார். சிங்கள மொழியை சரளமாக பேசக்கூடிய ஒருவராக இம்மாணவி திகழ்கிறார்.

பாடசாலையில் நடைபெறும் பல்வேறு பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டி வரும் இம்மாணவி, கடந்த வெள்ளிக்கிழமை அம்பாறை பண்டார நாயக்க மகளிர் மகாவித்தியாலயத்தின் காலை ஆராதனை நிகழ்வின் போது பாடசாலையின் நிருவாகத்தின் அழைப்பின் பேரில் விஷேட சிங்கள மொழியிலான சொற்பொழியொன்றை ஆற்றியிருந்தார். இச்சொற்பொழிவு தேசிய நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்திருந்ததுடன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது பாராட்டை பெற்றதும் சிறப்பம்சமாகும்.

காலை ஆராதனையின் போது கருத்து தெரிவித்த இப்பாடசாலையின் அதிபர் டப்ள்யு.ஈ. சிறியானி விஜயகோன் " தமிழ்மொழி மூல பாடசாலையில் கற்று இவ்வாறு இயல்பாக சிங்கள மக்களை விடவும் திறமையாக சிங்களத்தை மொழிவது இம்மாணவியின் உள்ளார்ந்த திறமையை எடுத்துக்காட்டுகிறது" என்றார். தாய்நாட்டின் அற்புதங்கள் பற்றி அர்த்தமுள்ள உரையொன்றை மாணவி பாத்திமா அஸ்லின் நிகழ்த்தினார்.அதனை தொடர்ந்து அனைவரினதும் வேண்டுகோளுக்கினங்க 'குழந்தைகளே எதிர்கால தலைவர்கள்' என்ற தலைப்பில் மற்றுமொரு உரையை நிகழ்த்தி பலரது வாழ்த்துக்களையும் பெற்றார். பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்ள இவர் தமிழ்தினப் போட்டி, ஆங்கில தினப்போட்டி, மற்றும் மீலாதுன் நபிவிழா போட்டிகளில், மாகாண, மாவட்ட ரீதியில் பல்வேறு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கலந்து கொண்டு பல வெற்றிகளையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

இவர் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா மற்றும் கிராம நிலதாரியாக கடமையாற்றும் திருமதி எம்.ஐ.பாத்திமா ஷர்மதா ஆகியோரின் புதல்வி ஆவார்.

## சுனாமியில் பலியானோரை நினைவு கூர்ந்து கிழக்கின் பல இடங்களில் நாளை நிகழ்வுகள்

*பாண்டிருப்பு தினகரன் நிருபர்*



நாட்டையே உலுக்கிய சுனாமி பேரலையில் சிக்கி உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து (டிசம்பர் 26) அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நாளை நடைபெறவுள்ளன.

கல்முனை பிரதேசத்தில் சுனாமி ஏற்பட்டு 19 வருட நினைவு நாள் நிகழ்வுகள் நாளை 26 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. கல்முனை, பாண்டிருப்பு, மணல்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத்தூபிக்கு முன்பாக மக்கள் ஒன்றுகூடி அஞ்சலிசெலுத்தவுள்ளனர்.

குறிப்பாக கல்முனை சவக்காலை வீதியில் கடற்கரை பிரதேசத்தையண்டிய பகுதியில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபிக்கு முன்பாக பொதுமக்கள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தவுள்ளனர். 26 ஆம் திகதி காலை 8.55 மணிக்கு இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

இதேவேளை பாண்டிருப்பு கடற்கரையில் மலர் தூவி பொதுமக்கள் அஞ்சலி செலுத்தவுள்ளதுடன். பாண்டிருப்பு சவக்காலை வீதியிலுள்ள சுனாமி நினைவுத்தூபிக்கு முன்பும் மக்கள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தவுள்ளனர் . இங்குள்ள இந்து, ஆலயங்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், பௌத்தவிகாரை ஆகியவற்றிலும் விசேட பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளன.

## மட்டக்களப்பு புனித சிசிலியா கல்லூரியில் ஒளிவிழா

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*



மட்டக்களப்பு புனித சிசிலியா தேசிய மகளிர் கல்லூரியின் 2023 ஆண்டிற்கான ஒளிவிழா நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி நித்தாஞ்சலி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஏ.தேவதாசன் மற்றும் வடக்கு கிழக்கு மெதடிஸ்த திருச்சபையின் தலைமை போதகர் கே.ஆர். அருள்ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன், இயேசுவின் இறையாட்சியை வெளிப்படுத்தும் கரோல் இன்னிசை கீதங்களும், நடனம், கதை, போன்ற கலை நிகழ்வுகளும் மாணவிகளால் சிறப்பாக அரங்கேற்றப்பட்டதுடன், அதிதிகளினால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## கிரான்குளத்தில் அகத்தியர் மருத்துவ முகாம்

*பாண்டிருப்பு தினகரன் நிருபர்*



அகத்தியர் மருத்துவ கூடலின் நான்காம் ஆண்டு நிறைவு மற்றும் அகத்தியரின் ஜனன தினத்தை முன்னிட்டு கிரான்குளம் பொது அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து நடாத்திய மாபெரும் அகத்தியர் மருத்துவ விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயத்தில் அகத்தியர் மருத்துவ கூடல் தலைவர் வைத்தியர் வர்ணகுலசிங்கம் பிரவீன் தலைமையில் நடைபெற்றது.

இங்கு இரத்ததானம், மருத்துவமுகாம் மற்றும் புற்றுநோய், நீரழிவு குழந்தையின்மை ஆகியன தொடர்பான மருத்துவம் சார் வழிகாட்டல் ஆலோசனைகள் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றன.

இம்மருத்துவமுகாமின் ஆரம்ப நிகழ்வில் அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் வ.கனகசிங்கம், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க.அருளானந்தம், டொக்டர் கோ.திவாகர், டொக்டர் திருமதி த.சௌகந்தியா, ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.புலேந்திரன், தாதி உத்தியோகத்தர் சாய்சங்கர், அகத்தியர் மருத்துவ கூடலின் செயலாளர் பி.சதுர்வணன் மற்றும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய பிரிவு மற்றும் இரத்த வங்கி பிரிவு ஆகியவற்றின் மருத்து குழாமினர் கலந்து கொண்டனர்.

இவ்வைத்திய முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு இரத்தப்பரிசோதனை, இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் மற்றும் உடல் திணிவு சுட்டி, குடும்ப நல ஆலோசனைகள் ஆகியன வழங்கப்பட்டதுடன் இளைஞர், யுவதிகளினால் இரத்ததான நன்கொடையும் வழங்கி வைக்கப்பட்டது.

## அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில் கல்லடி வேலூர் மாணவர்கள் கௌரவிப்பு

*மட்டக்களப்பு சுழற்சி நிருபர்*



கல்வி அமைச்சின் வழிகாட்டுதலில் கல்வித் திணைக்களம் நடத்திய பரதநாட்டிய கர்நாடக சங்கீதப் போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் பரிசளிப்புவிழா மட்டக்களப்பு கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்யாலயத்தில் நடைபெற்றது .

கல்வித் திணைக்களம் அனுராதபுரத்தில் நடத்திய இந்த தேசிய மட்டப் போட்டி நிகழ்ச்சியில் அகில இலங்கை ரீதியாக முதன்மை இடத்தை பெற்ற கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்யாலய மாணவ மாணவியர் சிறப்பு விருதுகளும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் தனி இசை ஜாவலி போட்டியில் மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்ற இப்பாடசாலையின் எட்டாம் தரம் மாணவரான மகேசன் மனோஸ் இவ்விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்த தேசிய மட்டப் போட்டி நிகழ்வில் குழுப் போட்டியான மீனவ நடனம் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த மீனவ நடனத்தை ஒழுங்கமைத்த ஆசிரியை திருமதி சந்திரவதனி சந்திரலிங்கம் மற்றும் தனி இசையை பயிற்றுவித்த திருமதி பிலோமி சஜி த் ஆகியோரும் இப்பரிசளிப்பு விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்,

இது தவிர கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணை குழுவினால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க போட்டியில் பாடசாலை மட்டத்தில் பாதுகாப்பு விவசாய பிரிவில் இரண்டாம் இடமும் திறந்தமட்ட விவசாய பிரிவில் மூன்றாம் இடமும் பெற்ற தரம் 9 மாணவன் சக்திகுமார் பிரதீப் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இப்பாடசாலையின் அதிபர் எஸ் .பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு வலய கல்விப்பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் ஹரிஹரராஜ் சிறப்பு பரிசுகளையும் விருதுகளையும் வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் முகாமையாளர் சுவாமி நீலமானந்தராஜ் மகராஜ், இலங்கை வங்கியின் கல்லடி கிளை முகாமையாளர் ஏ. எம் .பாரூக், மண்முனை வடக்கு கோட்டக் கல்வி பணிப்பாளர் ஆர் .ஜே பிரபாகரன், இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களான திருமதி டீ. அருட்ஜோதி, ஏ. ராசு உட்பட பல பிரமுகர்கள் பிரசன்னமாகி இருந்தனர்.

## பட்டிருப்பு தேசிய பாடசாலையில் தொழில்ஊக்குவிப்பு செயலமர்வு

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*



பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொழில் முனைவோர் கலாசாரத்தையும் தொழில் முனைவோர் மனநிலையையும் மேம்படுத்துதல், பொதுமக்களை தொழில் முயற்சியை நோக்கி ஈர்க்க முயற்சித்தல், தொழில்துறைக்கு முன்னுரிமை அளிக்கும் மாணவராக இருப்பதன் மூலம் எதிர்காலத்தில் வெற்றிகரமான தொழில் முனைவோராக்கல், தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்ய முயற்சி மேற்கொள்ளல், வேலைவாய்ப்பை உருவாக்குபவரை பாடசாலை மூலம் சமூகத்திற்கு கொண்டுவரல், சவால்களுக்கு பதிலளிக்கக்கூடிய வர்த்தக வாய்ப்பாக மாற்றக்கூடிய

இலங்கையரை உருவாக்கல், பாடசாலை தொழில் முனைவோர் வட்டங்களை ஏற்படுத்துதல் போன்ற குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் (தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி) அதிபர் தி.பார்த்திபன் தலைமையில் செயலமர்வொன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் மைக்கல் நிரோஸன்,

கைத்தொழில் அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் கௌசல்யா ஸ்ரீகாந்தன், கைத்தொழில் அபிவிருத்தி திணைக்கள விரிவாக்கல் உத்தியோகத்தர் என். கோகுலதாஸ் ஆகியோருடன் வளவாளராக குணாளன் கலந்து கொண்டனர்.

சுகாதார பராமரிப்பின் தரம், பாதுகாப்பு;

## கல்முனை சுகாதார நிறுவனங்கள் விருது வழங்கி கௌரவிப்பு

*பாலமுனை விசேட நிருபர்*



சுகாதார பராமரிப்பின் தரமும் பாதுகாப்பும் குறித்ததான மதிப்பீடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் சுகாதார அதிகாரிகளினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தர முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எம்.ஹில்மியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டீ.ஜி.எம்.கொஸ்டா பிரதம அதிதியாகவும், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எஸ்.ரீ.ஏ.பிரசங்க சேரசிங்க கௌரவ அதிதியாகவும், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.எல்.எப்.ரஹ்மான், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். ரஜாப் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

சுகாதார அமைச்சின் சுகாதார பராமரிப்பின் தரமும் பாதுகாப்பும் குறித்த பணிப்பாளர் அலுவலகத்தினால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட சுகாதார சேவையில் முன்மாதிரியான நடைமுறைகளுக்கான தர மதிப்பீட்டின் அடிப்படையில் பாலமுனை உளநல இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் முதலாமிடத்தினையும், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை இரண்டாம், மூன்றாமிடங்களையும் பெற்றுக் கொண்டன.

அத்துடன், கல்முனை பிராந்திய தர முகாமைத்துவ பிரிவினால் சுகாதார நிறுவங்களிடையே நடாத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதார வைத்தியசாலைகளுள் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை முதலிடத்தினையும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலை இரண்டாமிடத்தினையும், பொத்துவில் ஆதார வைத்தியசாலை மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கிடையில் இடம்பெற்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் முதலாமிடத்தினையும், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இரண்டாமிடத்தினையும், இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

பிரதேச வைத்தியசாலைகளிடையே இடம்பெற்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலை முதலாமிடத்தினையும், பாலமுனை பிரதேச வைத்தியசாலை இரண்டாமிடத்தினையும், காரைதீவு பிரதேச வைத்தியசாலை மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளிடையே நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் பெரியநீலாவணை, முகம்மதியாபுரம், உல்லை ஆகிய ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுக்கொண்டன.

சகல மதிப்பீடுகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு முதல் மூன்று இடங்களைப்பெற்ற சுகாதார நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், ஏனைய நிறுவனங்களின் சிறந்த செயற்பாடுகளையும் பாராட்டி பாராட்டுச் சான்றுதழ்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வாங்காமம் கரும்புக்காணிக்குள் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

*திராய்க்கேணி தினகரன் நிருபர்*



இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாங்காமம் பகுதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. அவர் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இச்சம்பவம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிகின்றது. அதன் பின்னர் சடலம் அருகில் இருந்த வீடு ஒன்றில் மறைக்கப்பட்டு அதிகாலை வேளையில் அருகிலுள்ள கரும்பு காணிக்குள் வீசப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் இரு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். முதலாளியிடம் இருந்த ஆடுகளை திருடி விற்பனை செய்ததன் காரணமாக அதில் ஏற்பட்ட ஆத்திரமே இக்கொலைக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. சடலம் வாங்காமம் பகுதியில் உள்ள கரும்பு காணி ஒன்றினுள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் 'மலையகம் 200 மாநாடு'







மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை (24) நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் 'மலையகம் 200 மாநாடு' மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் சிறப்பு அதிதியாக தமிழ்நாடு அதிமுக சட்டமன்ற உறுப்பினர் என். முருகுமாறன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# மாற்றுத்திறனாளிகளுக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்கல்

## புத்தளம் மாவட்ட செயலகத்தில் நிகழ்வு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்




மாற்றுத்திறனாளிகளின் சிறப்பு அம்சங்கள், தேவைகளை இனங்கண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தற்காலிக அடையாள அட்டை வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேர்தல் ஆணைக்குழு, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அமைப்பு மற்றும் பப்ரல் அமைப்பு ஆகியவை இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்துகின்றன.

கடந்த 3ஆம் திகதி சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்போது, புத்தளம் மாவட்டத்தில் சுமார் 500 இற்கும் அதிகமான மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

எனினும், அங்குரார்ப்பண நிகழ்வின் போது 75 பேருக்கு அடையாள அட்டைகள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டன.


இந்த தற்காலிக அடையாள அட்டைகள் நாடளாவிய ரீதியில் வாழும் சுமார் 5000 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்காகவும், வாக்களிக்கத் தகுதியுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய போது தெரிவித்துள்ளார்.

# இரு மோ. சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து; சிறுமி பலி

## கலென்பிந்துனுவெவயில் சம்பவம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



கலென்பிந்துனுவெவ வெலநேகம முற்சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கி'ள் நேருக்கு நேர் மோதி நேற்று முன்தினம் (23) இரவு விபத்திற்குள்ளானதில் 08 வயதுடைய சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெலநேகம உபுல்தெனிய பகுதியைச் சேர்ந்த சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவர்.

சிறுமி, தாய் மற்றும் சகோதரனுடன் கலென்பிந்துனுவெவயில் இருந்து உபுல்தெனிய பகுதிக்கு சென்று கொண்டிருந்த போது இருவர் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

காயத்திற்குள்ளான மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் கலென்பிந்துனுவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சிறுமியின் தாய் மற்றும் சகோதரன் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.


# மூடும் திகதியை நீடித்தல்

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

**Tender No.: 142/T/2023**

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் II ஆம் கட்டம், 2 ஆம் நடவடிக்கையின் கீழ் 'ஏ' பொதி பிரதான முனையக் கட்டிடம் பயணிகள் பாலம் இலக்கம் 2 மற்றும் பயணிகள் பாலம் இலக்கம் 3 இல் அடையாளம் காணப்பட்ட வேலைகளின் செயற்பரப்பெல்லை தொடர்பானது**

மேலேயுள்ள கேள்வி தொடர்பாக 2023 டிசம்பர் 03 ஆம் திகதியன்று ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகையிலும் 2023 டிசம்பர் 04 ஆம் திகதியன்று ''டெயிலி நியுஸ்'', ''தினமின'' மற்றும் ''தினகரன'' பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரங்களுக்கு மேலதிகமாக பின்வருமாறு அறியத்தரப்படுகின்றது.

மேலேயுள்ள விலைமனுவின் மூடும் திகதியானது 2024 சனவரி 10 ஆம் திகதியன்று புதன்கிழமை பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமானசேவை அமைச்சு,**
**மாடி 30, மேற்கு கோபுரம்,**
**உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு-01, இலங்கை.**


# வாகன விபத்து; ஒருவர் பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மிஹிந்தலை பொலிஸ் பகுதியில் வெலிஓய சந்தியில் நேற்று (24) அதிகாலை 04.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மதவாச்சி கேந்தாவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸிற்காக காத்திருந்த போது றம்பாவ பகுதியில் இருந்து மதவாச்சி பகுதிக்கு பயணித்துக் கொண்டிருந்த இலங்கைவங்கிக்கு சொந்தமான வான் ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து பஸ் தரிப்பிடத்தில் நின்றுகொண்டிருந்த நபருடன் மோதி வீதியை விட்டு விலகிச் சென்று வீழ்ந்துள்ளது.

# ஸ்ரீ லக்ஷ்மி புனர்வாழ்வு நிலையத்தில் நத்தார் பண்டிகை சிறப்பு நிகழ்ச்சி




ஸ்ரீலக்ஷ்மி புனர்வாழ்வு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வசிக்கும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் யுத்தத்தாலும் வன்முறைகளினாலும் விபத்துக்களினாலும் பாதிக்கபட்டவர்களுக்காகவும் ஊனமுற்றவர்களுக்காகவும் வசதி அற்ற சிறுவர்களுக்காகவும் நத்தார் பண்டிகை சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 22ஆம் திகதி இரவு 07 மணியளவில் வத்தளை புனித அன்னம்மாள் ஆலய பிரதம அருட்தந்தை கிரகரி ஜயந்த பிதா, சிறுவர், சிறுமியர்களை ஆசிர் வதித்து பரிசுகள் வழங்கினார்.

ஸ்ரீலக்ஷ்மி புனர்வாழ்வு நிலையத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பொ. சிவபாதசுந்தரனின் (சிவா ஆயுள்வேத சித்த வைத்தியர்) ஏற்பாட்டில் , பணிப்பாளர்களான விஸ்வரத்தினம், பிரதீப்குமார், நிலையத்தின் பிரதான முகாமைத்துவ அங்கத்தவர்களான, அருன் தவராஜா, ரட்ணகுமார், ரமேஷ், வைத்திலிங்கம், சிவஞானந்தன், சிவஞானம், திருமதி. தனலெக்ஷ்மி,மனோ, பெரேரா, ரோஷான் அனைவரும் கலந்து கொண்டனர்.

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 டிசம்பர் 25 திங்கட்கிழமை

# தடைக்கு பின்னர் முதல் முறை கழக போட்டியில் களமிறங்கினார் தனுஷ்க



இலங்கை துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்க சுமார் மூன்று ஆண்டுகளின் பின்னர் முதல் முறை களமிறங்கிய முதல் தர கிரிக்கெட் போட்டியில் 10 ஓட்டங்களையே எடுத்தார்.

சிங்கள விளையாட்டுக் கழகத்திற்காக (எஸ்.எஸ்.சி) ஆடும் குணதிலக்க பிரதான கழக மட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் தொடரில் நேற்று முன்தினம் (23) நுகேகொடை விளையாட்டு நலன்புரி கழகத்திற்கு எதிராக களமிறங்கினார். மொரட்டுவை டி சொய்சா அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் அவிஷ்க பெர்னாண்டோவுடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வந்த அவர் 21 பந்துகளில் 2 பெண்டரிகளுடன் 10 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்த கழகமட்ட ஒருநாள் தொடரில் பி குழுவில் முதலிடத்தை வகிக்கும் எஸ்.எஸ்.சி அணி இந்தப் போட்டியில் டக்வர்த் லுவிஸ் முறையில் 6 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

அவுஸ்திரேலியாவில் பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதல் நடத்திய சர்ச்சைக்கு முகம்கொடுத்த குணதிக்க மீது எஸ்.எஸ்.சி கழகம் விதித்திருந்த தடையை அந்தக் கழகம் கடந்த வெள்ளிக்கிழமை (22) உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கியதை அடுத்து குணதிலக்கவால் இலங்கை கழக மட்டப் போட்டிகளில் களமிறங்க முடிந்தது. ஏற்கனவே அவர் மீதான தடையை இலங்கை கிரிக்கெட் சபை சில மாதங்களுக்கு முன்னர் நீக்கி இருந்தது.

குணதிலக்க கடைசியாக 2020 ஆம் ஆண்டே எஸ்.எஸ்.சி அணியை பிரதிநிதித்துவம் செய்து கழகங்களுக்கு இடையிலான முதல்தர கிரிக்கெட் போட்டியில் விளையாடி இருந்தார்.

இலங்கை அணியுடன் டி20 உலகக் கிண்ணத்தில் ஆட அவுஸ்திரேலியா சென்ற குணதிலக்க பெண் மீது பாலியல் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் டோனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதியை மாத்திரம் கொண்ட வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி இடம்பெற்றதாக குற்றம்சாட்டப்பட்ட இந்த சம்பவத்தில் 32 வயது குணதிலக்க கிழக்கு சிட்னியில் குற்றம் சுமத்திய பெண்ணின் விட்டில் வைத்து ஆணுறை அணிவதற்கு மறுத்ததாக கூறப்பட்டது. எனினும் தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் அவர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

# அனீஸ் மால் கிண்ணம் சனிமௌண்ட வசமானது



ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று அனீஸ் மால் நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் சூ சிற்றி விளையாட்டு கழகம் நடத்திய அனீஸ் மால் உள்ளக உதைபந்தாட்ட சம்பியன் கிண்ண தொடரில் கல்முனை சனிமௌண்ட் விளையாட்டு கழகத்தினர் வெற்றி பெற்று, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அக்கரைப்பற்று அனீஸ் மால் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தொழிலதிபர் ஏ.சீ. அனீசிடம் சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை (21.12.2023) இரவு அக்கரைப்பற்று மாநகர புட்சால் மைதானத்தில் இடம்பெற்ற உள்ளக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாட அக்கரைப்பற்று சூ சிற்றி விளையாட்டு கழகமும் கல்முனை சனிமௌண்ட் விளையாட்டு கழகமும் தகுதி பெற்றனர்.

இறுதிப் போட்டியின் முழுநேர முடிவில் இரு அணிகளும் தலா 4 கோல்களைப் பெற்றதை அடுத்து பொனால்டி சூட் அவுட் முறையில் சனிமௌண்ட் அணி வெற்றியீட்டியது.

# ஒரே மாதத்தில் உலகில் கொவிட் 52 வீதம் உயர்வு




உலகம் முழுவதும் கடந்த ஒரு மாதத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 52 வீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மைக் காலத்தில் புதிய வகை கொரோனா திரிபான ‘ஜெஎன்.1’ மற்றும் ஒமிக்ரோன் ‘பிஏ.2.86’ வேகமாக பரவி வரும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

“கடந்த 28 நாட்களில் மட்டும் உலகம் முழுவதும் புதிதாக 8.50 இலட்சம் பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. 3,000க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் 8 வீதம் உயிரிழப்பு அதிகரித்துள்ளது’ என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் சுமார் 1.18 இலட்சம் பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கொரோனாவுக்கு சிகிச்சைப் பெற்று வருகின்றனர். அதில், 1,600 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். டிசம்பர் 17 ஆம் திகதி நிலவரப்படி, உலகம் முழுவதும் இதுவரை மொத்தம் 77.2 கோடி பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 70 இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# இரசாயன கப்பலின் மீது ஈரானிலிருந்து தாக்குதல்



இந்திய பெருங்கடலில் ஈரானில் இருந்து அனுப்பப்பட்ட ஆளில்லா விமானம் ஒன்று இராசாயன கப்பல் ஒன்றை தாக்கியதாக அமெரிக்க இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இந்திய கடற்கரையில் இருந்த 200 கடல் மைல் தொலைவில் செம் புளுட்டோ கப்பல் நேற்று முன்தினம் (23) தாக்கப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகன் தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து கப்பலில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டுள்ளது. எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

கெம் புளுட்டோ என்ற இந்த கப்பல் மீது ஈரானில் இருந்து வந்த ஒருவழி ஆளில்லா விமானமே தாக்கியதாக பெண்டகன் கூறியது. ஜப்பானுக்கு சொந்தமான லைபீரிய கொடியுடனான இந்தக் கப்பல் நெதர்லாந்தால் இயக்கப்படுகிறது என்றும் அது கூறியது.

இது தொடர்பில் ஈரான் உடன் எந்த பதிலும் அளிக்கவில்லை. யெமனின் ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது ஆளில்லா விமானம் மற்றும் ரொக்கெட் தாக்குதல்களை நடத்திவரும் நிலையிலேயே இந்த சம்பவம் நிழ்ந்துள்ளது.

பலஸ்தினத்திற்கு அதரவாக ஹூத்திக்கள் நடத்தும் இந்தத் தாக்குதல்கள் ஈரான் ஆதரவுடனேயே இடம்பெறுவதாக அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது.

தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக பல முன்னணி கப்பல் நிறுவனங்களும் செங்கடல் வழியான தனது பயணப் பாதையை இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு நாட்களில் இரண்டு குழந்தைகளை பெற்ற பெண்



இரண்டு கருப்பைகளைக் கொண்டுள்ள அமெரிக்கப் பெண் ஒருவர், அடுத்தடுத்த நாட்களில் இரு குழந்தைகளை பெற்றுள்ளார். கருத்தரிக்கும் மில்லியன் பேரில் ஒருவருக்கே இப்படி நிகழும் எனக் கூறப்படுகிறது.

32 வயது கெஸ்லி ஹேட்சர் மொத்தம் 20 மணி நேரம் மகப்பேற்று வலியில் இருந்தார்.

பர்மிங்ஹமில் உள்ள அலபாமா பல்கலைக்கழக மருத்துவமனையில் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை முதல் பிள்ளையையும் அதற்கு மறுநாள் இன்னொரு பிள்ளையையும் கெஸ்லி பெற்றெடுத்தார். இரண்டுமே பெண் குழந்தைகளாகும்.

கெஸ்லி ஏற்கனவே மூன்று பிள்ளைகளுக்குத் தாயாவார்.

2019 ஆம் ஆண்டு பங்களாதேஷ் பெண் ஒருவர் ஒரு மாத இடைவெளியில் தனது இரட்டை கருப்பைகளில் இரண்டு குழந்தைகளை பெற்றார் என்பது குறிப்படத்தக்கது .

## சர்வதேச செய்திகள்

# பலஸ்தீன போராளிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் வடக்கு காசாவில் 'போர் உக்கிரம்'

## 24 மணி நேரத்தில் மேலும் 201 பலஸ்தீனர்கள் பலி



வடக்கு காசாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியாக இஸ்ரேலியப் படை பலஸ்தீன போராளிகளுடன் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளது. காசாவுக்கு மேலும் உதவிகளை வழங்கும் ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையிலேயே மோதல் தீவிரம் அடைந்துள்ளது. எனினும் அந்தத் தீர்மானம் போர் நிறுத்தம் ஒன்றை வலியுறுத்தத் தவறியுள்ளது.

வடக்கு நகரான ஜபலியாவில் கரும்புகை வெளிவந்த வண்ணம் இருந்ததோடு இஸ்ரேலின் வான் மற்றும் செல் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருந்ததாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் வீசிய வெடிக்காத இரு ஏவுகணைகளை பயன்படுத்தி அந்தப் பகுதியில் உள்ள ஐந்து இஸ்ரேலிய டாங்கிகளை அழித்ததாகவும் படையினரை கொன்று மற்றும் காயப்படுத்தியதாகவும் ஹமாஸ் ஆயுதப் பிரிவான அல் கஸ்ஸாம் படை தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவை கட்டுப்படுத்தும் படை நடவடிக்கை கிட்டத்தட்ட நிறைவு கட்டத்தை எட்டி இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேலிய தலைமை இராணுவ பேச்சாளர், தெற்கு காசா பகுதி மீது அவதானம் செலுத்தி தரைவழி தாக்குதலை விரிவுபடுத்தப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிலைமை குறித்து இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் சனிக்கிழமை (23) பேச்சுவார்த்தை நடத்தியதாக வெள்ளை மாளிகை கூறியது. இஸ்ரேலின் பிரதான கூட்டாளியான அமெரிக்கா இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைக்கு தொடர்ந்து ஆதரவை வழங்கி வருகின்றபோதும், காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவது மற்றும் மனிதாபிமான நெருக்கடி குறித்து அக்கறையை வெளியிட்டு வருகிறது.

நெதன்யாகுவுடன் பேசியதன் விபரத்தை செய்தியாளர்களிடம் கூற மறுத்த பைடன், “அது ஒரு தனிப்பட்ட உரையாடல்” என்றார்.

எனினும் “போர் நிறுத்தம் ஒன்றை கேட்கவில்லை” என்று குறிப்பிட்டார்.

காசாவில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறிய வெள்ளை மாளிகை, பொதுமக்களை பாதுகாப்பது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பிலும் பேசியதாக அது கூறியது.

எனினும் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கையை குறைவான தீவிரத்துடன் ஹமாஸ் தலைவர்கள் மற்றும் உட்கட்டமைப்புகளை இலக்கு வைக்கும் வகையில் மாற்றிக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தும் என்ற நெருக்கடியுடன் பல நாட்கள் இழுபறி நீடித்த ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானம் அமெரிக்க நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை (22) நிறைவேற்றப்பட்டது. அதில் ‘காசாவிற்கு பாதுகாப்பான, தடையற்ற மற்றும் விரிவாக்கப்பட்ட மனிதாபிமான உதவிகள் செல்ல’ வலியுறுத்தப்பட்டதோடு நிலையான போர் நிறுத்தம் ஒன்றுக்கான நிபந்தனைகளையும் விதித்திருந்தது.

எனினும் இரண்டு மாதங்களுக்கு மேல் நீடிக்கும் போரை உடன் முடிவுக்குக் கொண்டுவரும்படி அழைப்பு விடுப்பதாக இந்தத் தீர்மானம் முன்னர் வரையப்பட்டபோதும் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அமெரிக்கா எதிர்ப்பை வெளியிட்டு வந்ததால் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

மனிதாபிமான இடைநிறுத்தங்கள் மற்றும் முழு போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த இரண்டு முந்தைய தீர்மானங்களை அமெரிக்கா வீட்டோ செய்த பின்னர், பாதுகாப்புச் சபை மூலம் நிறைவேற்றப்பட்ட போரின் முதல் தீர்மானம் இதுவாகும்.

எனினும் உதவிகள் செல்வதற்கு மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றே சரியான வழி என்று ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார். ‘உதவி வாகனங்களின் எண்ணிக்கை பற்றிய பிரச்சினையல்ல இது, இஸ்ரேல் நடத்தும் இந்தத் தாக்குதல்கள் உதவி விநியோகங்களுக்கு பாரிய இடையூறாக உள்ளது’ என்று அவர் கூறினார்.

இதேநேரம் ‘இஸ்ரேல் தனது இலக்குகள் அனைத்தையும் அடையும் வரை தொடர்ந்து போர் நீடிக்கும்’ என்று இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.



காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களால் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 201 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று கூறியது.

இஸ்ரேல் இராணுவம் காசா நகரத்தில் உள்ள இரண்டு குடியிருப்புகளைத் தகர்த்தது. இந்தத் தாக்குதலில் 90க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் பலியாகியுள்ளனர். அவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்டவர்களும் அடங்கும்.

இதனால் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 20,258 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 53,688 பேர் காயமடைந்துள்ளனர். தவிர ஆயிரக்கணக்கான சடலங்கள் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு கூறியது.

இடிபாடுகளிடையே சிக்கி இறந்த மனிதர்களின் உடல்களை பூனைகள் உண்பது போலான காட்சிகள் நிகழ்வதாகக் களத்திலிருந்து தகவல்கள் வெளியாகின்றன.

தெற்கு நகரான கான் யூனிஸில் இடிபாடுகளில் சிக்கி இருக்கும் உடல்களை உண்ணும் பூனைகளை விரட்டும் முயற்சியில் அந்த இடிபாடுகள் வழியாகச் செல்லும் மக்கள் ஈடுபட்டுள்ளனர். ஒருவர் அவ்வாறான சடலம் ஒன்றை போர்வையால் போர்த்தியதோடு, மற்றொருவர் அம்புலன்ஸ் வண்டியை அழைக்க முயன்றபோதும் தொடர்பாடல்கள் துண்டிக்கப்பட்டு காணப்படுவதாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

காசாவின் 2.3 மில்லியன் மக்கள் தொகையின் கிட்டத்தட்ட அனைவரும் இடம்பெயர்ந்துள்ளனர். இந்நிலையில் மத்திய காசாவில் மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. இதனையடுத்து புரைஜ் முகாம் மற்றும் மத்திய காசாவின் ஏனைய பகுதிகளில் இருந்து மக்கள் தெற்கு நகரான டெயிர் அல் பலாவை நோக்கி வெளியேற ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலின் புதிய வெளியேற்ற உத்தரவு சுமார் 150,000 பேரை பாதித்திருப்பதாக ஐ.நா கணித்துள்ளது.

‘காசாவில் உள்ளவர்கள் மனிதர்களே’ என்று பலஸ்தீன அகதிகளுக்கான நிவாரண மற்றும் பணிகள் நிறுவனத்தைச் சேர்ந்த தோமஸ் வைட் குறிப்பிட்டார். ‘அவர்கள் சதுரங்க பலகையின் காய்கள் அல்ல. பலர் ஏற்கனவே பல தடவைகள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள்’ என்றார்.

இந்த குறுகிய நிலப்பகுதியில் உள்ள மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற இஸ்ரேல் தொடர்ந்து உத்தரவுகளை பிறப்பிக்கின்றபோதும் அவர்கள் வெளியேற்றப்பட்ட இடத்திலும் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்துவதால் மக்கள் பல முறை இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் வடக்கு காசாவில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸில் அடைக்கலம் பெற்ற நிலையில் அந்த நகர் மீதும் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியது. இதனை அடுத்து அந்த மக்கள் மேலும் தெற்காக எகிப்து எல்லை வரை தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது எகிப்து எல்லையை ஒட்டிய ரபா பகுதி காசாவின் சன நெரிசல் மிக்க இடமாக மாறியுள்ளது.

இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் ஒருவரான மருத்துவர் நூர் வகுதி காசா நகரைச் சேர்ந்தவர் என்றபோதும் தற்போது அவர் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா பகுதியில் பணியாற்றி வருகிறார். ‘நோய்கள் பயங்கரமாக பரவி வருவதோடு உணவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது’ என்று அந்தப் பெண் மருத்துவர் குறிப்பிட்டார்.

புதிய வெளியேற்ற உத்தரவை அடுத்து மத்திய காசாவில் உள்ள மக்கள் தமது உடைமைகளை சுமந்தபடி கழுதை வண்டிகளில வீதி நெடுகவும் பயணித்து வருகின்றனர். குழந்தைகளை தள்ளு வண்டியில் தள்ளியபடியும் வயதானவர்கள் குளிர் காலத்தில் போர்வையை போர்த்தி தள்ளாடியபடியும் வீதிகளில் செல்வதை பார்க்க முடிவதாக அங்கிருப்போர் விபரித்துள்ளனர்.

எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேலியப் படை தொடர்ந்தும் கடும் எதிர்ப்புகளை சந்தித்து வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை ஐந்து இஸ்ரேலிய வீரர்களும் சனிக்கிழமை மேலும் எட்டு இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் சுரங்கப்பாதைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறான சுரங்கப்பாதைகள் வழியாக தோன்றும் பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலிய துருப்புகள் மீது சூடு நடத்துவதாக அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்ட எட்டு வீரர்களில் சிலர் ஏவுகணை மற்றும் ரொக்கெட் தாக்குதல்களால் பலியானதாகவும் சிலர் துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டதாகவும் அந்த இராணுவ பேச்சாளர் கூறியுள்ளார்.

வடக்கு காசாவில் முன்னேற்றம் கண்டதாக இஸ்ரேல் கூறியபோதும் அங்கு இஸ்ரேல் தனது படைகளை தொடர்ந்து இழந்து வருவதோடு காசாவில் இருந்து இஸ்ரேலை நோக்கி ரொக்கெட் தாக்குதல்களும் தொடர்ந்து நீடித்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஒக்டோபர் பிற்பகுதியில் காசா மீது தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 154 ஆக அதிகரித்துள்ளது.

மறுபுறம், பலஸ்தீனர்களில் ஹமாஸ் அல்லது இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் நபர்களை விசாரிக்க இராணுவம் கைது செய்து இஸ்ரேல் அழைத்துச் செல்கிறது. இப்படி அழைத்துச் செல்லப்படுபவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது குறித்து கேள்வி எழுப்புமாறு ஹமாஸ் உலக அமைப்புகளை வலியுறுத்தி வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.